# திராவிடநாடு

16—4—61 | வாரவெளியீடு | விலை 16 கா


## ஏதனால்?

—[ நாஞ்சில் ஆ. ஆரிது ]—

—[✻✻✻]—

வகைமுட்டி வழிமுட்டி நிலைகெட்ட பேரும்
மலை எட்டக் கொடிகட்டி குடிகட்டி நிற்க,
பகை வெட்டிக் கொடிகட்டிப் புகழ்தொட்ட தமிழா!
பசிபட்டு பிணிபட்டு வலைபட்ட தேதனால்?

திசை எட்டும் வழிபட்டு வழிவிட்ட தமிழா
திசைகெட்ட பசுவிட்ட சிறுகுட்டி போலே
இசைகெட்டு அருள்கெட்டு இருள்பட்டு இன்று
இடிபட்டு மிதிபட்டு இழிவுற்ற தேதனால்?

கடிபட்ட எள்ளளவு சிறுநாடு கூட
கரையற்றுத் தலைநீட்டித் தனியாக நிற்க
முடிபட்ட மலைமுட்டும் உன்பெரிய நாடு
முழுமூடன் அறிவன்ன வலைபட்ட தேதனால்?

அடிபட்ட நாய்கூட எதிர்வெட்டித் தாக்கும்
அலைபட்ட புழுக்கூட கரைஎட்ட நீந்தும்
பொடிபட்டும் புதைபட்டும் அடிமைவலைப் பட்டும்
புகைபட்ட சுவரன்ன நீஇருப்ப தேதனால்?

# இனத் துரோகி!

—[சி. இரா. சாரநாத்]—

"மல்............"

வார்த்தை முடிவு பெறவில்லை. அதற்குள் 'லொக்... லொக்' எனச் சித்திரைவதை செய்யும் இருமல் குறுக்கே எழுந்தது. இன்று...... நேற்று இந்தக் கொடிய வேதனை? எட்டுமாத காலமாக, எலும்புருக்கியின் கோரப்பிடியினுள் அகப்பட்டு, வாழ்விற்கும் சாவிற்கும் இடையில் ஊசலாடிக்கொண்டிருந்தார் கனகசபை.

"என்னங்கப்பா? கூப்பிட்டிங்களா?"—பருவத்தை அடைந்த மலர், வெம்பும் வெயிலில் வாடியது போல் பொலிவிழந்து — அதிலும், தோன்றுகிற முறுவல் புன்னகையோடு எதிரே வந்து நின்றாள், அவரது மகள் மல்லிகா.

"பார்லி கஞ்சி கொஞ்சம் கொண்டாம்மா!"—திரும்பிப் படுத்தவாறே கேட்டார் கனகசபை. அடுத்த கணம் உச்சிமீது வானிடிந்து வீழ்ந்ததுபோல் மல்லிகாவின் வாயில் இருந்து ஒரு சொல் வெளிவந்தது.

"இல்...லை!"

மேலே சொல்லவும், மெல்லவும் முடியாது அவள் திணறினாள். அவளுக்கே பரிதாபமாக இருந்தது.

"உம்!"

கனகசபையின் இதயம் ஒரு வரண்ட பெருமூச்சைவிட்டது. இதைஅவர் எதிர்பார்த்தவரேஅல்ல. அவரிடம் பணம் இருந்தபோது, எத்தனை நண்பர்கள், உறவினர்கள் வந்து அட்டையைப்போல ஒட்டிக் கொண்டார்கள்! இன்று, அவரது வீட்டில் ஒரு பன்னிரண்டு புதுக் காசு பார்லிக்கு வழி இல்லை என்ற சொல் வரும் என்று அன்று அவரால் எண்ணியிருக்கத்தான் முடியுமா?

"ஏம்மா! ஏதாவது சாப்பிட்டாயா?"

பார்லிக்கே இல்லாதபோது சோற்றுக்கு மட்டும் என்ன, இருக்கவா போகிறது? இருந்தாலும் அப்படிக் கேட்பதில் அவருக்கு ஒரு அமைதி. அவ்வளவுதான்!

மல்லிகா மாற்றம் நல்கவில்லை. அடிசில் அறைக்குள் புகுந்தாள். பாயில் புரண்டு புரண்டு படுத்திருந்த அவரது தொண்டையின் வரட்சி அதிகமாகத்தான் இருந்தது. அவருக்கு அருகே வைக்கப்பட்டிருந்த கொட்டாங்குச்சியில், மணலோடு விளையாடிக்கொண்டிருந்த உமிழ்நீரைச் சுற்றி ஈக்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

இதயவானத்தில் நிகழ்ச்சி மின்னல் கீறலிட்டதும், வேதனை இடிகள் வெடிப்பதைப்போல, தாங்க முடியாத சுமையைத் தூக்கி வந்த ஒருவன், சுமைதாங்கியின் மீது அதனை இறக்கிவைத்துச் சும்மாட்டை உதறி உடலைத் தளர்த்துவதைப்போல-கனகசபையின் நெஞ்சில் தோன்றிய "இல்லை" என்ற ஒலியைத் தொடர்ந்து இரண்டு இருமலும் லொக்...லொக் என வந்தது.

குற்றம் இழைத்தவன் நெஞ்சும், சேறு நிறைந்த குட்டையும் ஒன்றுதான். இரண்டிலும் 'கடந்தகால'க் கல்லை விட்டெறியும்போது, சகதியாக அவை கலங்கித்தான் ஆக வேண்டும்.

"அம்மா!"

"ஏம்பா?"

"தொண்டை வரளுதம்மா... கொஞ்சம் வெந்நீராவது கொண்டா!"

தந்தையின் ஆவல் கலந்த ஏவலைப் பூர்த்திசெய்த மகள், அவரது தலைமாட்டருகில் அமர்ந்துகொண்டு செல்லமாகக் கேட்டாள்;

"நான் சொல்றேன்னு கோபப் படாதீங்க அப்பா. ஏதாவது உதவி தேவைன்னா சொல்லியனுப்பும்படி வளவன் சொல்லிட்டுப்போனார். நான் வரச்சொல்லி ஆளனுப்பட்டுமா?"—அருகில் இருந்த ஓலை விசிறியை எடுத்துத் தந்தையின் உடலுக்கு நேரே வீசிக்கொண்டிருந்தாள் மல்லிகா. அந்தக் காற்று, அவருக்குச் சற்று இதமாக இருந்தது.

கனகசபை பதிலொன்றும் பேசவில்லை. ஆனால், அந்த மௌனத்தில் சோகம் கலந்த நிராதரவு இழையோடிக்கொண்டிருந்தது. தனக்காக இன்று இரங்கும் ஒரே உயிர் வளவன். ஆனால்...?

அவரது கண்கள், அருகே இருந்த தண்ணீர்க்கோப்பைக்குள் நின்றன.

"ஆபத்துச் சமயத்திலும் இந்த வறட்டுக் கௌரவத்தையும் பிடிவாத குணத்தையும் கட்டிப்பிடித்துக் கொண்டு இருப்பது நல்லதல்ல."

மல்லிகா பேசிக்கொண்டே போனாள். அதற்குமேல் அவரது காதுகள் அவளது பேச்சைக் கேட்கவே இல்லை.

தண்ணீர்க் கோப்பைக்குள் பகுதியளவே நின்ற தண்ணீர், விசிறிக் காற்றுப்பட்டு மெல்லிய அலைகளை ஆட்டிக்கொண்டிருந்தது. அந்தக் கோப்பைக்குள் கனகசபையின் கண்கள் நிலைக்கவே, பழைய காட்சிகள் தோன்றின.

"பெரிய மேத்திரி ஐயா! உங்களை அவசரமா முதலாளி கூட்டிவரச் சொன்னார்!" — மேத்திரி கனகசபைக்கு அருகே, அலுவலகப் பையன் மணி நின்றுகொண்டிருந்தான்.

"என்னடப்பா அவ்வளவு அவசரம்? இப்படி ஒரு பெரிய மேத்திரி இருப்பது எப்படி உங்க முதலாளிக்கு நினைவு வந்தது?"—கேட்டுக் கொண்டே கையில் இருந்த இச்பானரை பெட்டிக்குள் போட்டுவிட்டு எழுந்தார் கனகசபை. பெரிய முதலாளி இறந்துபட்டபோது தற்போதிய முதலாளியான சின்னவர் —

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (16—4—61) தனிப்பிரதி 16 காசு [இத

# டில்லித் தேர்தல் கற்பிக்கும் பாடம்!

அண்மையில், இந்தியத் துணைக்கண்டத்தின் தலைநகரிலே நடைபெற்ற துணைத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியை எதிர்த்து கட்சிகள் பலவும் சுயேச்சைகள் சிலரும் போட்டியிட்டனர். போட்டியென்றாலே காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பான மக்களின் வாக்குகள் பல்முனைப் போட்டியேற்பட்டதின் காரணத்தாலேயே சிதறுண்டு, காங்கிரஸ் வெற்றிக்கு வாய்ப்பு ஏற்படுவதுதான் இயற்கை. இதுகாறும் நடைபெற்றுவந்த உண்மையும் கூட. எனினும், இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையிலேயே போட்டிகள் பலமுனைகளில் இருந்து ஏற்பட்டும் கூடக் காங்கிரஸ் கட்சி படுதோல்வி கண்டிருக்கிறது.

இரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் வாக்காளர்களைக் கொண்ட புதுடில்லித்தொகுதி துணைத்தேர்தலிலே, ஆளும் சுட்சியை எதிர்த்து ஜனசங்கம், இந்து மகாசபை, சுதந்தராகட்சி, கம்யூனிஸ்டு ஆதரவுபெற்ற உறுப்பினர் ஒருவர், மற்றும் ஒரு சுயேச்சை உறுப்பினர் ஆகிய ஐவர் போட்டியிட்டனர். காங்கிரஸ்கட்சி உட்பட அனைவரும் மிகத் தீவிரமான தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் சக்தியின் நம்பிக்கையைப் பெறவும், வரும் பொதுத்தேர்தலுக்கு அடிக்கல் நாட்டக்கூடிய முறையிலும் தேர்தலின் வெற்றிதோல்வி ஆளும் கட்சிக்கு ஒரு அந்தஸ்தும், கவுரவமும், ஏற்படக்கூடிய நிலையில் மக்கள் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒரு பெரிய வாய்ப்பாகவும் இந்தத் துணைத்தேர்தல் அமைந்துவிட்டது.

தேர்தல் களத்திலே அனைவரும் தீவிரமாகவே ஈடுபட்டனர். மிகவும் மும்முரமான பிரச்சாரமும் நடைபெற்றது. எங்கும் ஒரே பரபரப்பு.

காங்கிரஸ் கட்சியை எதிர்த்து ஐவர் போட்டியிட்டதால் "வெற்றி நமதே" "ஜெய்ஹிந்த்" என்ற பேரொலியோடு காங்கிரஸ் கட்சி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. காங்கிரஸ் கட்சியின் சார்பிலேதான் திரு. **ராஜ்ஜங் பகதூர் சிங்** என்பவர் போட்டியிட்டார். யார் இந்த ராஜ்ஜங் பகதூர் சிங் என்ற கேள்வியொன்றை எழுப்பினால்தான் காங்கிரஸ் கட்சியின் யோக்கியதை பொது மக்களுக்கு நன்கு புலப்படும்,

இன்றைய காங்கிரஸ் உறுப்பினர் திரு. ராஜ்ஜங் பகதூர் சிங் என்பவர் உண்மையில் காங்கிரஸ்காரர் அல்ல. காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலங்களைக் கடுமையாக எதிர்த்து வந்தவர். 1952-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து சுயேச்சை உறுப்பினராகப் போட்டியிட்டார்.

**"காங்கிரஸ் ஆட்சி முழுவதும் காரிருள் கவ்விக்கொண்டிருக்கிறது. பட்டப்பகலில்கூட அதற்கு ஒளி தேவைப்படுகிறது."**

மேற்கண்ட வாசகங்களுடன் ராஜ்ஜங் பகதூர் கையிலே ஒளிவிளக்கு ஒன்று வைத்துக்கொண்டுள்ள உருவப்படம் பொறித்த சுவரொட்டிகளைத் தனது பிரச்சாரத்தின் மூலதனமாக கருதினார் ராஜ்ஜங் பகதூர் சிங். 1952-ம் ஆண்டிலேயே காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்ட இருளைப் போக்குவதற்கு ஒளிவிளக்குத் தேவைப்பட்டது என்றால், எட்டு ஆண்டுகளுக்குப்பின்னர் நிலைமை என்ன என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்தப் பேருண்மையை நன்கு தெரிந்தும்கூட அன்றொரு நாள் சுயேச்சை உறுப்பினராகப் போட்டியிட்ட ராஜ்ஜங் பகதூர் இன்றையத் தினம் காங்கிரஸ் உறுப்பினர்!

மொத்தம் 1,02,479 வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்திருக்கின்றனர். 1,885 வாக்குகள் செல்லுபடியாகாதவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட துணைத் தேர்தல்களில் வாக்குப்பதிவு பொதுவாகவே மந்தமாகவேதான் இருக்கும். என்றாலும், இந்தத் துணைத் தேர்தலில் 40 சதவிகிதம்தான் வாக்குப் பதிவாகியிருக்கிறது. இந்த எண்ணிக்கை எதிர்பார்த்ததைவிட மிகமிகக் குறைவாகவே உள்ளது.

தற்போது நடைபெற்ற இந்தத் துணைத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராஜ்ஜங் பகதூர் 9,581 வாக்குகள் வித்தியாசத்தில் பேராசிரியர் மோடக் அவர்களால் தோற்கடிப்பட்டிருக்கிறார். பேராசிரியர் மோடக் (ஜன சங்கம்) 47,184 வாக்குகளும், ராஜ்ஜங் பகதூர் சிங் (காங்) 37,603 வாக்குகளும், ஓம்பிரகாஷ் குப்தா (கம். ஆதரவு) 10,479 வாக்குகளும், திருமதி. மன்மோகினி சைகால் (சுதந்திரா) 5,722 வாக்குகளும், பிரகாஷ் பாகி (சுயே) 955 வாக்குகளும், ஹரிலால் சாக்சேனா (இந்துமகாசபை) 536 வாக்குகளும் பெற்றிருக்கின்றனர்.

தலைநகரிலே நடைபெற்ற இந்த துணைத் தேர்தல், காங்கிரஸ் கட்சி, தன் கவுரவத்தையும், அந்தஸ்தையும், நாட்டு மக்கள் அந்தக் கட்சியினிடத்தே கொண்டுள்ள நம்பிக்கையையும் இழந்துகொண்டு வருகிறதென்பதைக் காட்டிவிட்டது.

சுதந்தரம் பெற்றுப் 14 ஆண்டுகள் ஆகியும் மக்களுக்குச் சுகபோக வாழ்வு இல்லை. எங்கு பார்த்தாலும் பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம். அதுமட்டுமா! விலைவாசி உயர்வு! மிகமிகச் சாதாரண மக்கள்மீது, ஏழை எளியவர்கள்மீது தாங்கமுடியாத வரிச் சுமைகளை அடுக்கடுக்காக ஏற்றுவது! இவையத்தனைக்கும் சேர்த்துத்தான் பொதுமக்கள், ஆட்சியாளருக்குத் தக்கதோர் பாடம் கற்பித்திருக்கின்றனர்.

இதில். எதிர்க்கட்சியினர்,குறிப்பாக வலதுசாரிஎன்று கூறிக்கொள்வோர் உணரவேண்டிய உண்மை ஒன்றும் இருக்கிறது. காங்கிரஸ்கட்சியை எதிர்த்து ஐவர் போட்டியிட்டனர். எதிர்க்கட்சியினர் வாக்குகளை ஐவரும்பகிர்ந்து கொண்டனர். எனினும் காங்கிரஸ்கட்சியினரால் வெற்றி பெற முடியவில்லை. எனவேதான், வர இருக்கிற தேர்தலில் எதிர்க்கட்சியினர் கூட்டு என்றால் காங்கிரஸ் கட்சியினர் குலைநடுங்குகின்றனர். கூட்டு ஏற்படாமல்பார்த்துக் கொள்ளும் வகையில் ஆளும் கட்சியினருடைய சொல்லும் செயலும் இருக்கிறது. இது, ஆளுங்கட்சி, கலகலத்து வருகிறது என்கிற உண்மையை உலகுக்கு உணர்த்துவதாக உள்ளது.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

பெரிய முதலாளியின் மூத்த மகன்–தன்னை அவ்வளவு இலட்சியம் செய்வதில்லையே, என்ற மனத் தாங்கலோடுதான் பேசுகிறார் என்பதை உணர்ந்த ஐம்பது வயதான அலுவலகப்பையன், அசட்டுச் சிரிப்போடு பேசாது நின்றான்.

"வாங்க கனகசபைபிள்ளைவாள்!"—உள்ளே நுழைந்த கனகசபைக்கு முதலாளியின் வரவேற்பு 'அமர்க்களம்' என்பார்களே, அப்படி இருந்தது.

"கூப்பிட்டீர்களாமே!"

"ஆமாம், பிள்ளைவாள்! உங்க அப்ளிகேஷனை நேற்றுத்தான் சாங்ஷன் பண்ணினேன்! நீங்க பத்து ரூபாய்தானே இன்கிரிமெண்ட் கேட்டிருந்தீர்கள். நான் பதினைந்துக்குப் போட்டிருக்கேன்!"

முதலாளியின் பேச்சு, கனகசபையைக் குளிரச் செய்தது.

"வளவன்தானே! அவன் மகா பொல்லாதவனுங்க. ஸ்பின்னிங் ஆளுகளை எல்லாம் ஒன்னுசேர்த்து சங்கம் வைக்கிறவனுச்சே!"

"அதுக்குத்தான், அவன் மேலே ஏதாவது குற்றம் சுமத்தி அவனை வேலையை விட்டே நீக்கணும்"—முதலாளி தலையைச்சுற்றி மூக்கைப் பிடித்தார்.

"அவ்வளவு திமிரா அவனுக்கு?" மசிந்துவந்தார் கனகசபை.

"நீங்கள் அடிக்கடி அவன்மேல் ஒவ்வொரு ரிப்போர்டா எழுதி, என்னிடம் கொண்டுவரவேண்டும். பிறகு எங்குயரி, பிறகு சஸ்பெண்ட்."

"ஏன் சொல்றேன்னு...!"–கனகசபையின் காதைக் கடித்தார் முதலாளி.

"இந்தக் காலத்திலே வேலை கொடுக்கிறது ஒன்றைத்தான் முதலாளிகள் செய்யமுடியும். காரணம் இல்லாமல் ஒரு தொழிலாளியை நிறுத்தமுடியாது பாருங்க!"

நிமிர்ந்து நின்ற முதலாளியின் கைகள் கோட்டுப் பைக்குள் சென்றன. அந்த முகத்திலே ஒரே கலகலப்பு! வெற்றி!

"இதோ பாருங்க, உங்களுக்கு விருப்பம்னு செய்யுங்க. இல்லேன்னு ஆயிரம் பேர் உண்டு. நீங்க எங்கப்பா காலத்திலே இருந்து இந்த மில்லைப்பற்றித்தெரிந்தவர் என்கிறதுனலே உங்ககிட்டே சொல்றேன். எங்கப்பா ஆதரவு உங்களுக்குக் கிடைத்ததுபோல, என் ஆதரவும் கிடைக்கணும்னு, செய்துதான் ஆகணும்."

காசல்லவா? கனகசபையின் கண்கள் இருண்டன. தொடர்ச்சியாகப் பல புகார்கள் வந்தனவென்றும், எந்த ஆலையின் வரலாற்றிலும் இல்லாத அளவு புகார்கள் வழங்கப்பட்டதாயும் வளவன்மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, வளவனை வேலையில் இருந்தே நீக்கிவிட்டார் முதலாளி.

செய்தி அறிந்த சங்கம் கொதித்தது. நல்ல உள்ளங்களில் வேதனைத் தீ பாய்ந்தது. வளவன்மீது சாற்றப்பட்டுள்ள குற்றங்கள், அபாண்டமானவை, அர்த்தமற்றவை என்று சங்கப் பிரதிநிதிகள் மறுப்புத் தெரிவித்து, வளவனை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று முதலாளியுடன் வாதாடினர். முதலாளி எதற்கும் அசைந்துதராது குத்துக்கல்லாய் இருந்தார். வேறு வழியின்றி, விடயம் தொழிலாளர் கோர்ட் வரைக்கும் செல்லவேண்டியதாயிற்று. ஆனல், நீதிமன்றத்தில் .........?

'தொழிலாளர்கள் சலியாத உழைப்பால் சேகரிக்கப்பட்ட பல சான்றுகளைக்கொண்டு,வளவன்மீது செய்யப்பட்ட புகார்கள் அனைத்தும் பொய்; வளவன் தொழிலாளர் சங்கம் அமைத்த ஒரே காரணத்தால் இப்படிப் புகார்களை அவன் மீது சுமத்தி வேலையிலிருந்து நீக்க முதலாளி வர்க்கம் திட்டம் இட்டு வேலை செய்திருக்கிறது!' என்பது நிரூபிக்கப்பட்டதும், முதலாளி அவரது குணத்தைக் காட்டிவிட்டார் தன் வாக்குமூலத்தின் மூலம்.

"வளவனுக்கும், பெரிய மேஸ்திரியான கனகசபைக்கும் ஏதாவது தகராறு இருக்கலாம். அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனல் பெரிய மேஸ்திரியின் மூலம் வளவனைப்பற்றிப் பல புகார்கள் வந்தன. எனவேதான், வளவனை நான் வேலையில் இருந்து நீக்கவேண்டியதாயிற்று!" — என்று மழுப்பலானர். விளைவு...

குற்றம் முழுவதும் 'பெரிய மேத்திரியைச் சார்ந்தது. தண்டனை அவரைத் தஞ்சம் அடைந்தது. இதே நிலை அவரை இன்றைய நிலையில் நடமாடக்கூடமுடியாத பிணமாக மாற்றிவிட்டது.

*

நெட்டுயிர்த்தார் பெரிய மேத்திரி. தான் இனத்துரோகியாக இருந்தும், தன்னல் பெரும் தீங்கு ஏற்பட்டிருப்பினும், அதை எல்லாம் மறந்துவிட்டுத் தன்குடும்பத்திற்கு உதவ வலிய வரும் வளவனை நினைத்ததும், அவரது குற்ற நெஞ்சில் வேதனை வெள்ளமாயிற்று.

'வளவன்!' ஆயிரத்தில் ஒருவன், என்று மெல்ல முணுமுணுத்தது காய்ந்த கனகசபையின் உதடு.

"திராவிட நாடு;" "HOME LAND"

## விற்பனையாளர்களுக்கு

31—3—61 முடியக் கணக்கு நேர் செய்யவேண்டியிருப்பதால், மார்ச் முடியவுள்ள பட்டியல் பாக்கி **முழுவதையும் 18—4—61**-க்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பாக்கி முழுதும் அனுப்பத் தவறுபவர்களுக்கு, "திராவிட நாடு," "Home land" இரண்டு இதழ்களும் 23—4—61 முதல் **கண்டிப்பாக நிறுத்தப்படும்** என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பொறுப்பாளர்.**

# தீயும் தென்றலும்

## டி.கே.சீனிவாசன்

எவராவது இடைவழியில் தட்டுப் படமாட்டார்களா என்ற எண்ணத்தால் அங்கிருந்து நடந்தாள் பத்மா. பூங்காவைக் கடந்து சிறிது தூரங்கூடச் சென்றிருக்கமாட்டாள்; வழியில் யாரோ நாலுபேர் நடைபாதையில் படுத்துறங்கிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய நாதியற்ற நிலையை அந்த நடைபாதைமட்டும் எடுத்துக்காட்டவில்லை; படியாது படர்ந்திருந்த கேசமும், பாதி உடலுக்குக்கூடப்போதாதகிழிந்தஆடையும் சுட்டிக்காட்டின. உதவி கோருகிற நிலையில் இருப்பவர்களிடங்கூட, உதவி தேடுகிறநிலை சமயங்களில் உருவாகிறது என்ற எண்ணம் அவளுடைய உள்ளத்தில் தோன்றி உடனே மறைந்தது.

"ஐயா! ஐயா!"

அந்த அழைப்பு, அவர்களைப் போலவே அனாதையாகித் தவித்தது. எழுந்திருக்கும் நிலையில் அவர்கள் இல்லையோ, அல்லது எழுப்பிவிடும் அளவுக்கு அவளுடைய குரலுக்கு வலிவில்லையோ, தெரியவில்லை; அந்தச் சடலங்களிடம் சலனமே தோன்றவில்லை. தட்டி எழுப்பலாம் என்ற முடிவோடு கரத்தைக்கூட நீட்டிவிட்டாள்; உள்ளத்தில உருவான கூச்சம், உடனே அவளைக் கட்டுப்படுத்திற்று.

பின்னாலிருந்து யாரோ சிரிப்பதை உணர்ந்தாள் பத்மா. திரும்பிப்பார்த்தாள். இருபத்தோராவது நூற்றாண்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவன், காலத்தைக் கடுவேகமாக முந்திக்கொண்டு ஓடிவந்ததைப்போல அவள்முன் காட்சியளித்தான். அவன் உதட்டில் ஒட்டிக்கொண்டிருந்த சிகரட், புகைவதா அல்லது அணைவதா என்பது புரியாமல் திண்டாடிக்கொண்டிருந்தது.

"தூங்குகிற இடத்துக்கே தேடி வந்து எழுப்பத் தொடங்கிவிட்டீர்களா? உங்களைச் சொல்லி என்ன ......?"

"சீ......!" என்ற ஒருசொல் அம்பாக அவளிடமிருந்து வெளிப்பட்டு, அவன் மேலும் பேச்சைத் தொடராமல் துண்டித்தது.

"என்னம்மா, என்மேல் எரிந்து விழுகிறாய்? எழுப்பவேண்டிய தொல்லைகூட இல்லாமல் விழித்துக்கொண்டு அலைகிறேனே நான்!"

குருதி கொதிப்பேறித் தன் உடலை உறுத்துவதை உணர்ந்தாள் பத்மா. இருந்தாலும் விமலாவின்நிலை...... பெருமழையில் சிக்கித் தவிப்பவன், குட்டிச்சுவர் குறுக்கிட்டாலும் கிட்ட நெருங்கி ஒதுங்க நினைப்பதுபோல, இவனையாவது துணை செய்யலாமா என நினைத்தாள்.

"ஐயா! அங்கே ஒரு ஆள் ஒரு பெண்ணைக் கையைப் பிடித்து..." அதற்குமேல் சொல்ல அவளுக்கு அருவருப்பாக இருந்தது.

"உன்னோடு வந்தவளா?"

"ஆமாம்"

அவதிக்குள்ளானவனைப்போல ஆழ்ந்த பெருமூச்சொன்றை வெளிப்படுத்தினான் அவன்.

"ம்...அவனுக்கு ஆள் கிடைத்து விட்டது..." இதைமட்டும் சொல்லிப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு விழிகளுக்கு வேலைகொடுக்கத் தொடங்கினான்.

தூய்மைக்கும், தோற்றத்துக்கும் தொடர்பே இருப்பதில்லையோ என்ற சந்தேகம் தோன்றியது பத்மாவுக்கு. பற்றிய நெருப்பை அணைத்துவிடலாம் என்று நீர்மொள்ளக் கிணற்றில் இறங்கும்போது, படியில் படிந்துள்ள பாசி வழுக்கி உள்ளே விழ நேர்ந்தால்......அவளை மீட்பதற்கே எவரையாவது அழைக்கவேண்டிய நிலைக்குள்ளானாள்.

இனிமேல் தனியேபோக அவளுடைய மனம் இடங்கொடுக்கவில்லை. மறுபடியும் அந்த இருவர் அருகில் வந்தாள். அதுவரை உரத்துப் பேசிக்கொண்டிருந்த இருவரும் இவள் அருகே வந்தவுடன் அமைதியின் உருவானார்கள். இழுத்துச் செல்லுகிற வேலையை அவன் தொடங்கினான்; விடுவித்துக்கொள்ளுகிற போராட்டத்தை விமலா தொடர்ந்தாள். திகில் ஓரளவு குறைந்துவிட்டதால், பத்மாவின் மனம் சிறிதளவு தெளிவு பெற்றிருந்தது. அவனையே வேண்டிக் கேட்டால்......

"வீதியோடு போகிற பெண்ணிடம் வீண் வம்பு செய்வது உங்களைப் போன்ற நாகரிகமானவர்கள் செய்கிற காரியமா?"

பணிவோடு அவள் வெளியிட்ட அந்தச் சொற்களைப் பரிகாசம் செய்வதுபோல அவன் சிரித்தான்.

"அன்புக்கு அடங்காத பெண்கள் எப்போதும் வம்புக்குத்தான் பணிகிறார்கள். நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டுபோ. விமலாவை பத்திரமாக நான் வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்."

"என்னோடுதான் வந்தாள் அவள்."

"துணைக்கு நானிருக்கிறேன் என்று தெரிந்தும், ஒரு தோழியை அழைத்து வந்திருக்கிறாள். இவள் ஒருத்திபோதும் இப்போது எனக்கு."

இனி அ[illegible]னோடு பேசுவதில் எந்த விதப் பய[illegible]மில்லை என்பதை உணர்ந்தாள் பத்மா. வந்த வழியில் இருந்த திரைப்படக் கொட்டகை அவள் நினைவுக்கு வந்தது. அங்கே போனால் எவராவது... ஓடினாள்,

இவள் அந்தத் தெருமுனைக்குத் திரும்பியபோது,திரைப்படக்கொட்டகையின் வெளிப்புறத்து விளக்குகள் எரியத் தொடங்கின. உள்ளேயிருந்து தள்ளப்படுவதைப்போல, வெளியே வேகமாக வந்து விழுந்தனர் மக்கள். உருவான நம்பிக்கையை உடனடியாக நெஞ்சில் விதைத்து, ஓரளவு உயரத்துக்கு வளர்த்துக்கொண்டாள் பத்மா. பிறகு, வேகமாகத் திரும்பி நடந்து வந்து விடுதலையை எதிர்பார்த்துக் காத்து நின்றாள்.

ஓரிரு நிமிடங்களில் அந்தக் கூட்டம் அவர்களைச் சூழ்ந்துகொண்டது.

"என்னய்யா விஷயம்?"

ஒன்றையொன்று எதிர்பாராமலே எழுந்த ஒருவிதச் சொற்கள் பலரிடமிருந்து வெளிப்பட்டு,அந்த மூவரையும் முற்றுகையிட்டன.

"இது தனிப்பட்ட விஷயம். தயவு செய்து யாரும் தலையிடாதீர்கள்" என்றான் அந்த இளைஞன்.

"இல்லை, இல்லை. இந்த ஆள்..." என்று தொடங்கினாள் விமலா.

"நீ சொல்லம்மா" என்றான் ஒருவன்.

"இந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது. தினந்தினம் பள்ளிக்கூடம் போகும்போதும், வரும்போதும் இந்த ஆள் என் பின்னாலேயே வருவார். நான் பார்க்காததுபோலப் போய்விடுவேன். இன்று பள்ளிக்கூடத்திலிருந்து திரும்ப நேரமாகிவிட்டது. பின்னாலேயே வந்து இவர் என் கையைப் பிடித்து......" சொல்லுக்குச் சொல் துளித்துளியாகக் கண்ணீரை வடித்த விமலா, அதற்குமேல் அவ்வளவையும் வழியவிட்டாள்.

"இந்தக் காலத்திலே இப்படிப்பட்ட பசங்க ஏராளமாச் சுத்தறானுங்க. மடிப்புக் கலையாமே சலவை பண்ணி, சல்லடமும் சட்டையும் மாட்டிக்கிட்டு, பச்சையாத் தெரிஞ்சா மேய ஆரம்பிக்கிறானுங்க"—விரிவுரையாளன் ஒருவன் தொடங்கி வைத்தான்.

"துணியை லாண்ட்ரியிலே வாங்கிடலாம். குணத்தை எங்கே போய் வாங்குறது?"—அறிவுரையாளன் தன் கருத்தை அறிவித்தான்.

"விடக்கூடாது இவனை. பிடிச்சுப் போலீசுலே ஒப்படைக்கணும்"—விவகார ஞானமுள்ளவனுடைய ஆலோசனை.

"போலீசு என்ன செய்யப் போகுது? அவுங்களே காஞ்சிக் கிடக்கிறாங்க. கொஞ்சம் கையைக் காட்டினாக் கண்ணை மூடிக்குவாங்க. பொதுஜனங்கதான் கவனிக்கணும்." அபிநயத்தோடு இதை அறிவித்தான் விஷயந் தெரிந்தவன் ஒருவன்.

அனாதையான ஒரு பெண்ணை, ஆபத்திலிருந்து மீட்கிற பொறுப்பை அங்கிருந்த அத்தனை ஆண்களும் ஏற்றுக்கொண்டனர். ஓங்கி ஒரு அடி விழுந்தது அந்த இளைஞன் முதுகில்; தொடர்ந்து அத்தனை கைகளும் இயங்கத் தொடங்கின.

"ஐயோ! ஐயோ!" என்ற அலறல், அங்கே இருந்த கூச்சலில் அமிழ்ந்தே போனது. அவன் பணிந்துவிட்டான் என்று தெரிந்ததும்,அளவுக்குமேல் துணிந்துவிட்டது அந்தக் கூட்டம்.

"என்னை விட்டுவிடுங்கள்; ஓடிப் போகிறேன்" என்ற கதறல்.

துடித்துப்போனாள் பத்மா. ஒவ்வொரு அடி விழும்போதும் அவள் உள்ளத்தில் ஏதோ ஒன்று உட்கார்ந்து எழுந்திருப்பதைப்போல உணர்ந்தாள். எப்படியாவது அந்தக் கூட்டத்துள் புகுந்து அவனைக் காப்பாற்ற ஏங்கினாள் அவள்.

அத்தனைபேரையும் துளைத்துக் கொண்டு வெளியேவந்து ஓடத் தொடங்கினான் அவன். துரத்திக் கொண்டு ஓடியது அந்தக்கூட்டம்.

வேதனை பத்மாவின் உள்ளத்தை வெட்டிச்சிதைத்தது. பெண்மையின் மென்மையான உணர்வுகள் அளவுக்குமீறி அலைக்கழிக்கப்பட்டன. அந்தக் கூட்டம் வருவதை அந்த இளைஞனுக்கு முன்னரே அறிவித்திருந்தால், அங்கிருந்து ஓடி மறைந்திருப்பானே என்று நினைத்தாள். தன்னுடைய தவறால்தான் அவனுக்குஅந்த இன்னல் ஏற்பட்டது என்ற எண்ணம் அவளுடைய உள்ளத்தைத் தண்டித்தது.

எண்ணச் சிக்கலில் இவள் சீரழிந்து கொண்டிருக்கும்போதே, அத்தனை பேரும் அவளுடைய பார்வைக்கு எட்டாததூரத்தில் மறைந்து விட்டனர். விமலாவையுங்காணோம்; அவள் எடுத்துவந்த புத்தகங்கள் மட்டும் நிலத்தில் இறைந்து கிடந்தன. ஒவ்வொன்றாக அவற்றைப் பொறுக்கிச் சேர்த்தாள் பத்மா. எடுத்த புத்தகம் ஒன்றிலிருந்து, ஏதோ கீழே விழுந்தது. ஒரு புகைப்படம் — அத்தோடு ஒரு கடிதம். வெளிச்சத்துக்கு எடுத்துவந்து அவற்றைப் பார்த்தாள்.

அந்தப் புகைப்படம்! அடிவாங்கிய அதே இளைஞன்! மயக்குவதற்கே படமாக உருவானதுபோல மலர்ந்த இதழ்களும், குளிர்ந்த விழிகளும், குறும்பை வெளிப்படுத்தின. அதிர்ச்சி தாங்காது பத்மாவின் உள்ளம் அயர்ந்தே போனது.

அந்தக் கடிதத்தைப் பிரித்தாள்.

அன்புள்ள விமலாவுக்கு,

எட்டு மணிக்கெல்லாம் கட்டாயம் வந்துவிடுவேன் என்றுசொன்னாய். எதிர்பார்த்துக் காத்திருப்பேன். ஏமாற்றிவிடாதே.

உன் நேசமுள்ள'
கண்ணன்.

படித்து முடித்ததும் பத்மாவிடமிருந்து "அடிப் பாவி!" என்ற இரண்டே சொற்கள்தாம் வெளிப்பட்டன.

எரியத் தொடங்கிய தீயில் தன் இதயம் சாம்பலாவதை உணர்ந்தாள் பத்மா. காலியாக இருந்த அந்தத் தெருவில் கண்ணுக்குத் தெரியாது மறைந்துபோன கூட்டம் ஓடிய திக்கையே நோக்கிக்கொண்டு நின்றாள். "ஐயோ! ஐயோ!" என்ற அவலக்குரல் அவளைச் சுற்றி ஒலித்து, எதிரொலித்தது. நிலைபெயர வழியில்லாது, ஒளி கொட்டிக்கொண்டிருக்கும் விளக்குக் கம்பங்கள் எல்லாம், தீப்பந்தங்களை வைத்துக்கொண்டு இவளுடைய வருகைக்காகக் காத்திருப்பதுபோலத் தோன்றிற்று. அதற்குமேல் அவளால் அங்கே நிற்கமுடியவில்லை—நடந்தாள்.

எட்டாத உயரத்தில் கொட்டப்பட்டிருந்த தாரகைகள், தங்களைச்சூழ்ந்துள்ள இருளைக் கண்டு நடுங்கிக் கொண்டிருந்தன. ஓடிக்கொண்டிருந்த நாயொன்று திடீரென நின்று, எதையோ நினைத்துக் கொண்டு ஓலமிடத் தொடங்கியது. தொங்கவும் இடம் கிடைக்காமல் தூங்கவும் வழியில்லாமல் வட்டமிட்டுக்கொண்டிருந்தது ஒரு வௌவால். அலைந்துகொண்டிருந்த காற்றுக்கு வேறு வேலையில்லாமல், அமைதி காணத் துடிக்கும் தங்களை ஆட்டி அசைத்துத் தொல்லை கொடுப்பதுபோல ஓசை எழுப்பின மரக்கிளைகள். துப்புரவாகத் துடைத்துப் போட்டிருக்கும் தெருவில், தின்பதற்கு ஏதாவது கிடைக்காதா என்று தேடித் துழாவிக் கொண்டிருந்தது ஒரு மாடு.

(தொடரும்)

# அஞ்சாமை

[ கனகு ]

"என்னைப்பற்றி இவர்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? இப்படியொரு கோரிக்கையை என்னிடம் எடுத்துவர அவர்களுக்கு எத்துணைத் துணிச்சல் இருக்க வேண்டும்!" தனியறையில் அமர்ந்திருந்த மருத்துவர் எழிலன் இப்படிப் பேசிக்கொண்டிருந்தார். அவரைக் காணுவதற்குச் சென்ற நான், அவர் பேச்சொலிகேட்டு யாருடனோ அவர் உரையாடிக்கொண்டிருக்கிறார் என்று எண்ணி, வாயிற்படியருகில் சற்றுத் தயங்கி நின்றேன். திரும்பவும் எழிலன் பேசினார். முதலில் சொல்லியவற்றையே திரும்பவும் சொன்னார். முன்னிலும் சற்று அழுத்தமாகவே சொன்னார். எனக்கு வியப்பாய் இருந்தது. 'சொன்னதையே இவர் திரும்பத்திரும்பச் சொல்கிறார். எதிர்த்தரப்பிலிருந்து மறுமொழியைக் காணோம்! ஏன்?'

கதவிடுக்கு வழியாக உள்ளே நோக்கினேன். எழிலனைத் தவிர வேறுயாரும் அங்கிருப்பது என் பார்வைப் பரப்பிற்படவில்லை. ஒருவேளை என் பார்வையிலிருந்து மறைந்திருக்கும் பகுதியில் அந்த மற்றவர் அமர்ந்திருக்கலாம் என்று எண்ணினேன். வாயிலருகிலேயே காத்துநின்றேன்.

சிறுபொழுதில் எழிலன் வெளியே எட்டிப்பார்த்தார். "வாருங்கள்" என்றார் என்னைக் கண்டதும்.

"உள்ளே யாருமில்லையா?"

"யாருமில்லையே!"

"நீங்கள் யாருடனோ பேசிக்கொண்டிருந்தீர்களே!"

"நானா? இல்லையே!—நான்மட்டுந்தான் நெடுநேரம் இங்கு தனிமையில் அமர்ந்திருக்கிறேன்!"

நண்பர் யாருடனும் உரையாடவில்லை. தமக்குத்தாமே — தன்னையறியாமல், தாம் உள்ளத்துள் எண்ணுவதாகநினைத்துக்கொண்டு, உரக்கப் பேசியிருக்கிறார்.

"உட்காருங்கள்" என்றார் எழிலன்.

"நேரமாகிவிட்டதே! வெளியில் போகவில்லையா?" என்று வினவியவாறு அவர் எதிரில்போய் அமர்ந்தேன் நான்.

என் கேள்விக்கு அவர் மறுமொழி கூறவில்லை.

"இன்று காலையிலிருந்து என் மனம் நிம்மதியாக இல்லை. இன்று முழுதும் வெறும் குழப்பத்தோடு கழிந்துவிட்டது........." என்று தம் மனநிலையைச் சொன்னார் அவர்.

நான் மௌனமாக அவரைப் பார்த்தேன்.

"மற்றவர்களின்விருப்பு, வெறுப்பு, உட்கிடக்கை இவற்றை எண்ணிப் பார்க்காமலே, சிலர் வாயில் வந்ததைக் கூறிவிடுகின்றார்களே!–அவர்களுக்கு எல்லாம் சிந்தனை என்ற ஒன்று இருக்குமா?"

"சிந்தனை இல்லாமல் என்ன! எல்லாரிடமும் அது இருக்கிறது. சிலரிடம் அது முடங்கிக் கிடக்கும். சிலரிடம் விளங்கி நிற்கும். சிலர் உண்மை நியதிகளை ஒதுக்கி வைத்துவிட்டுத், தங்கள் தேவை, ஆசை, நோக்கம் அல்லது போக்கு இவற்றிற்கிசையச் சிந்தனையை ஓடவிடுகிறார்கள். சிலர் என்று சொல்வதைவிட, அத்திறத்தார் பலர் என்று சொல்வதுதான் சாலப் பொருந்தும். அவர்கள் எல்லாம், நல்லதை, சால்பு உள்ளதை, சீரியதை எண்ணிப் பார்க்கக்கூட நேரமில்லாதார்; — பேராசை என்னும் பேரியக்கத்தால் முடுக்கிவிடப்பட்ட இயந்திரப் பொம்மைகள்."

"நன்று சொன்னீர்கள். நன்றாய்ச் சொன்னீர்கள்! அப்படிப்பட்டவர்கள் எவ்வாறோ வாயில் வந்ததைச் சொல்லிவிடுகிறார்கள். நம்மால் அவற்றைக் கேட்டுக்கொண்டு வாளாவிருக்க முடியவில்லையே! இது விந்தையல்லவா?"

"விந்தையொன்றும் அதில் இல்லை. அப்படியே விந்தை எனப் பட்டாலும், அந்த விந்தையின் முன்னிலை நீங்களும் இல்லை; அவர்களும் அல்ல; நீங்கள் கொள்கின்ற உணர்வும் அல்ல."

"பிறகு!"

"உங்கள் மென்மை வாய்ந்த உள்ளந்தான் அதன் முன்னிலை."

"ஓகோ, அதைச் சொல்கின்றீர்களா!"

"சரி, செய்தி என்னவென்று...?"

* * *

இன்று அதிகாலையில், நான் வழக்கமாக எழுகின்ற நேரத்திற்கு அரைமணி முன்னால், வெளிக் கதவை இடிக்கும் ஒலி கேட்டது. வீட்டில் எல்லாரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்—நான் கூடத்தான். கதவைத் தட்டும் ஒலி கேட்டுத்தான் நான் விழித்தேன். வாயிலுக்குச் சென்று கதவைத் திறந்து பார்த்தேன். வெளியில் இருவர் நின்றுகொண்டிருந்தனர்.

தெரு விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. வைகறை இருள் கவிந்து கிடந்தது. வெளியில் நின்றோரை நன்றாகப் பார்க்க முடியவில்லை. நடை விளக்கைப் போட்டுவிட்டு, அவர்கள் இருவரையும் உள்ளே அழைத்தேன். அவர்களில் ஒருவன் உடலெங்கும் ஒரே குருதிக் காயங்களோடு, தாங்கமுடியாத வேதனையோடு, நிற்கமாட்டாமல் நின்றுகொண்டிருந்தான். மற்றவனுக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. உடனே இருவரையும் மருத்துவ அறைக்கு அழைத்துச்சென்று, கட்டுகள் கட்டி, மருந்துகள் கொடுத்தேன். பாவம், அவர்கள் ஏழ்மை நிலையினர், விவரம் தெரியாத பாமர மக்கள். இருவரும் ஐம்பத்தைந்துக்கும் ஐம்பதுக்கும் இடைப்பட்ட வயதினர். யாரோ நாலைந்து பேர் சேர்ந்துகொண்டு, அவர்களைக் கண்டபடி அடித்துப் புடைத்துள்ளார்கள் என்பதை, அவர்களின் உடலில் தென்பட்ட காயங்களும், சிராய்ப்புகளும் கூறின.

சிகிச்சைகள் முடிந்தபின், அவர்கள் இருவரும் என் கால்களைப் பிடித்துக்கொண்டார்கள். என் கண்கள் கலங்கிவிட்டன. பேச முடியவில்லை என்னால். அவர்களைத் தூக்கி நிறுத்திவிட்டு, ஒதுங்கி நின்றுகொண்டேன்.

"சாமி, உங்கள் பிள்ளைகுட்டிகள் எல்லாம் நல்லா இருக்கணும். முடியாது போன்னு எங்கே எங்களை மறுத்துவிடப் போறீங்களோன்னு அஞ்சிக்கிட்டே வந்தோம். உங்கள் நல்ல மனசு மாதிரி ஒரு மனசை எங்கேயுமே காணமுடியாது சாமி."

அவர்கள் அப்படிச் சொன்ன போது, எனக்கு அழுகையே வந்துவிட்டது. அந்த நிலையில் அவர்களுக்கு மருத்துவம் பண்ணமுடியாது என்று யார்தான் திருப்பி

அனுப்புவார்கள்?—அதை நினைக்கவே என்னுல் முடியவில்லை. நான் பேசாமல் நின்றேன்.

"அடிதடிக் கேசு. மருந்துபோட முடியாது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போங்கன்னு எங்கே சொல்லி விடுவீங்களோன்னு நினைச்சோம் சாமி. உங்க மனசு நல்ல மனசு சாமி'' என்ருன் திரும்பவும் ஒருவன்.

"சாமி, எங்க கையிலே இப்போ தம்பிடி கூடக் கெடையாதுங்க. மத்தியானமா எங்கேயாவது கேட்டு, எப்படியாவது பணம் கொண்டாரோம் சாமி—உங்களுக்குக் குடுக்க வேண்டிய பணம். பொறுத்துக்கங்க சாமி'' என்ருன் மற்றவன்.

நான் அவர்களிடமிருந்து கூலி பெறவேண்டுமென்று எண்ணவே இல்லை.

"பணம் ஒன்றும் நீங்கள் கொண்டு வந்து தரவேண்டாம். மாலையிலும் திரும்ப ஒருமுறை வந்து மருந்து போட்டுக்கொண்டு போங்கள்'' என்றேன் நான்.

அவர்கள் கிளம்பினுர்கள். அப்போதுதான் நினைவு வந்தவன்போல் அவர்களை விளித்தேன்.

"ஆமாம், உங்களை யார் இப்படிப் புடைத்தது? அவர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டாமா?-நான் வேண்டுமானுல் உங்கள்காயங்களைப்பற்றி நன்ருக எழுதித் தருகிறேன். வழக்கு மன்றத்திற்கு வந்து சான்றுகூடச் சொல்கிறேன்.''

"வேண்டாம் சாமி. அது பெரிய வம்பு. சும்மா இருக்கும்போதே எங்களை இப்படி அடித்து நொருக்கி விட்டார்கள். இனி, வழக்கு, கோர்ட்டுன்னு வேறே போனு எங்களை உயிரோடவே வைக்கமாட்டார்கள். வீடு, வாசலை எல்லாம் பொசுக்கி, நாசமாக்கி எங்களைக் குடிவிரட்டி விடுவாங்க சாமி; அதோடு எங்களை இப்படி அடித்துப் போட்டதுக்கு யார் காரணம் என்று தெரிஞ்சா, நீங்ககூட இப்படிச் சொல்லமாட்டீங்க!''

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? யாராக இருந்தால்தான் எனக்கென்ன! அநியாயம், அடாவடி செய்கின்றவர்களை எல்லாரும் கண்டிக்க வேண்டியதுதானே!''

என் வார்த்தைகளைக் கேட்டதும், தங்கள் வேதனையைக்கூட மறந்து அந்த ஏழையர் குபீரென்று சிரித்தனர்.

அவர்கள் சிரிப்பு, எனக்கு வியப்பை அளித்தது. நான் பல முறை அவர்களை வற்புறுத்திக் கேட்டேன். சிரிப்பின் காரணத்தை என்னிடம் அவர்கள் சொல்லவில்லை. அவ்வாறே,அவர்களைத் தாக்கியோர் யார் என்பது பற்றியும் அவர்கள் சொல்ல மறுத்துவிட்டார்கள். ஆமாம், அச்சந்தான் அதன் முன்னிலை. அச்சத்தைத் தவிர முன்னிலை வேறு யாதாகத்தான் இருக்கமுடியும்?

அந்த ஏழையர் இருவரும் போய் விட்டார்கள். அவர்கள் போனபின்பும், அவர்களைப்பற்றியே நான் சிந்தித்துக்கொண்டிருந்தேன். அன்னுரின் நிலைபற்றிச் சும்மா சிந்திப்பதையும், வருந்துவதையும் தவிர, வேறு ஏதேனும் என்னுல் செய்யமுடியுமா என்ற ஆராய்ச்சியில் என் எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. பொழுதும் போய்க்கொண்டிருந்தது.

பிற்பகல் சரியாக ஒரு மணி. பகல் உணவைக்கூடமறந்து, இதேஅறையில் சிந்தனையும் இல்லாமல், அதன் இன்மையும் இல்லாமல், குழப்பமான தொரு நிலையில் அமர்ந்திருந்தேன்.

"என்ன டாக்டர், யோசனை பலமாக இருக்கிறதே!'' என்று வினவிக்கொண்டு அறைக்குள் நுழைந்தார் சோலையாண்டி. அவர்தான் இந்த வட்டாரத்துச் சட்டமன்ற உறுப்பினர், பெருஞ்செல்வர், - ஆலையரசர் சோலையாண்டி.

"வாருங்கள்'' என்று அவரை வரவேற்றேன். அவர் எத்தனையோ தடவை என்னை வழியிற் கண்டிருக்கிருர். என் வீட்டு வழியாக எத்தனையோ தடவை அவர் போவதைக் கண்டிருக்கிறேன் நான். வெளியூர்களிற்கூடப் பலதடவை அவரும், நானும் சேர்ந்துகொண்டிருக்கிருேம். ஆனுல், ஒரு தடவையேனும் அவரோடு நன்ருக நான் பேசியது கிடையாது. ஒரு தடவையேனும் இதற்குமுன் என் மருத்துவமனை நோக்கி அவர் வந்தது கிடையாது. ஏதோ, எப்போதோ மிகமிக இன்றியமையாமை கருதி இரண்டொரு வார்த்தைகள் அவருடன் நான் பேசியிருப்பேன், அவ்வளவோடு சரி.

இன்று என் இருப்பிடம் தேடியே அவர் வந்திருக்கிருர். அது என்னை வியப்பிலாழ்த்தாமல் இருக்குமா?

"வா, வா! நீயும் வா!''

வெளியில் நின்ற வேருெருவரைப் பார்த்துக் கூப்பிட்டார் சோலையாண்டி.

அவர்கள் என்ன அலுவலாக வந்திருக்கிருர்களோ? நான் வினவவில்லை. அந்த வினுவை முகத்தில் தேக்கி சோலையாண்டியை நான் ஏறிட்டு நோக்கினேன்.

"வேறென்றும் இல்லை. உங்களால் முக்கியமான, அவசரமான, காரியம் ஒன்று ஆகவேண்டும்...''

அப்போதும் நான் ஒன்றும் அவரிடம் வினவவில்லை. மௌனம் கலையாமலே அவரைப் பார்த்தேன்.

"இதோ இருக்கின்ருன் பாருங்கள், இவனுக்குச் சான்றுத்தாள் ஒன்று கொடுக்கவேண்டும். அதாவது இவன் உடலில்அடிபட்ட காயங்கள் இருந்தனவென்றும், அந்தக் காயங்களுக்கு நீங்கள் மருத்துவம் புரிந்தீர்கள் என்றும்......... வேறென்றும் இல்லை.''

அவர் அழைத்துவந்த ஆளை நான் ஏற இறங்கப்பார்த்தேன். தெம்பான உடற்கட்டோடு தென்பட்டான் அவன். தோற்றத்தில் அவன் ஒரு காலி;—உள்ளபடியும் காலிதான்.

"இவனுக்கு எதற்கு அப்படியொரு சான்றிதழ்? இவன் தாக்கப்பட்டவனுகவோ, காயங்கள் உடையவனுகவோ தோன்றவில்லையே!''

"எல்லாம் காரணமாகத்தான் நீங்கள் கொடுங்களேன்! பின்னுல் விளக்குகிறேன்!''

அவர் அதிகாரத்தோடு கேட்டார். எனக்கு ஆத்திரமாக வந்தது.

"இல்லை, இல்லை. அப்படி நான் கொடுத்துப் பழக்கமில்லை'' என்றேன் நான், சற்றுக் கண்டிப்பாக.

"பழக்கமில்லை. அதை உங்கள் கேள்வியே சொல்கிறது. இன்று பழகிக்கொள்ளுங்கள்''

அவர் சிரித்துக்கொண்டு பேசினுர். எனக்கு வேதனையாக இருந்தது.

'கயமை புரியப் பழகிக்கொள் என்கிருரே! எவ்வளவு துணிச்சல் இவருக்கு — நீதியற்ற போக்கிலே நடந்துகாட்ட! என்னை எப்படிப்பட்டவன் என்று எண்ணிக்கொண்டு இங்கே வந்திருக்கிருர் இவர்? கயவன், வஞ்சகன், பணம் வந்தால் எதையும் செய்யக்கூடியவன், அதிகாரத் தன்முனைப்பிற்கு அடங்கி ஒடுங்கி நேர்மைக்குப் புறம்பானதை, மனச்சான்றைப் புதைகுழியில் போட்டு மறைக்கவைப்பதைச்

(12-ம் பக்கம் பார்க்க)

# உரிமைக்குப் போராடும் உத்தமன் — லூத்துலி

"பத்தடி அகலம், ஏழடி நீளம் உள்ள ஒரு சிறு அறையில் நாங்கள் ஐவர் அடைக்கப்பட்டிருந்தோம். உள்ளேஇரண்டு வாளிகள். ஒன்றில்குடிநீர்இருந்தது.பிறிதொன்றினைச் சிறுநீர், மலம் கழிப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இரவும், பகலும் அந்த அறைக்குள்ளாகவே நாங்கள் அடைக்கப்பட்டிருந்தோம். இந்தச் சிறைக்கூடத்திலே அடைத்து வைக்கப்பட்டிருந்த நாங்கள் ஒருவருக்கு ஒருவர் கலந்து உறவாட வாய்ப்பளிக்கவில்லே. என்றாலும், எப்படியோ அதிகாரிகளுக்குத் தெரியாமலேயே சில நேரங்களில் அடுத்துள்ள நண்பர்களைப் பார்ப்பது வழக்கம். உடற்பயிற்சியின் பொருட்டு பதினைந்து நிமிட நேரம் வெளியிலே அனுமதிக்கப்பட்டது போக, மீதி நேரம் அனைத்தும் சிறைக்கூடத்தின் பலத்த பாதுகாப்பிலேயே நாங்கள் இருந்தோம்.''

''விடியற்காலேயில் ஐந்தரை மணிக்கு' நாங்கள் துயில் எழுவோம். ஆறரை மணிக்குள்ளாக காலேச் சிற்றுண்டியை முடித்துக்கொள்வோம். உணவு என்றால் கூழ் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லே. நித்தம் நித்தம் அது தான்.''

''மீண்டும் பதினொரு மணிக்குப் பகல் உணவு—உப்பில்லாத மக்காச்சோளம். வாரத்திற்கு ஒருநாள் அல்லது இரண்டு நாள் சிறு அளவு மாமிச உணவு. இரவு உணவு, மாலே இரண்டுமணிக்கெல்லாம் கொடுத்துவிடுவார்கள். அதுவும் ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் பன்னிரண்டு மணிக்கெல்லாம் கிடைத்து விடும். எங்களுக்கு அளிக்கப்படும் போர்வைகள், படுக்கைகள் முழுவதும் தொல்லே தரும் பூச்சி வகைகள்.''

விடுதலே வீரர்களுக்கு விளேவிக்கப்பட்ட கொடுமைகள், இழைக்கப்பட்ட அநீதிகள் ஏராளம். என்றாலும், இழைக்கப்பட்ட கொடுமைகளைச் சரித்திரத்திலே படித்தும், விடுதலே உணர்ச்சி இன்னமும் மங்கிப்போய் விடவில்லே. மாண்டு மடிந்து போகவில்லே. உலகத்தின் எந்தப் பகுதியிலும் படித்தவர்கள் வாழும் நாடாக இருந்தாலும்—பாமரர்கள் வதியும் பூமியாகஇருந்தாலும், விடுதலேப் போர்க்கொடி உயர்த்தப்பட்டு வருவதை அன்றாடம் நாம் பார்த்து வருகிறோம். ஏகாதிபத்திய வல்லரசுகள் நாளுக்கு நாள் விடுதலே உணர்ச்சிக்கு மண்டியிட்டு வருகின்ற நிலேமைகளைக் கண்ணாரக் காண்கிறோம்.

இருண்ட கண்டம் என்று சொல்லக்கூடிய தென்னாப்பிரிக்கா, ஒரு காலத்தில் பல்வேறு ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆதிக்கத்தில் ஆண்டாண்டுக் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்தது. ஆனால், இன்றைய நிலே, ஆப்பிரிக்காக் கண்டத்தின்—பல்வேறு பகுதிகள் விடுதலேபெற்று, ஐ. நா. பேரவையில் அங்கம் வகிக்கும் நிலேபெற்று, உலக நாடுகளின் சம அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன. சிலபல ஆண்டுகளுக்கு முன்னர் நாம் எண்ணிப் பார்க்கக்கூட முடியாத நாடுகள் பல, இன்றைய தினம் தன்னாட்சிபெற்றுத் தனியரசாகத் திகழ்கின்றன.

அப்படிப்பட்ட மகத்தான விடுதலேப் பணியில் ஈடுபட்ட ஆப்பிரிக்க நாட்டுத் தலேவர் உதிர்த்த வாசகங்கள்தான் துவக்கத்திலே நாம் எடுத்துக் காட்டிய கொடுமைமிக்க சிறை வாசம். 'ஆல்பர்ட் ஜான் லூத்துலி' என்ற அந்தத் தலேவர், ஜுலு என்ற இனத்தைச் சேர்ந்தவர். ஒருவகை மலேஜாதியினர்தான் அந்த ஜுலு என்ற இனத்தவர். லூத்துலி மலேசாதியைச் சேர்ந்தவர் என்றாலும் பெருநோக்கும், பீடுநடையும், அன்புள்ளமும், அறப்போராட்ட எண்ணமும் உடையவர். பலாத்காரத்தில் துளியும் நம்பிக்கையில்லாதவர். பலாத்காரத்தை அடியோடு வெறுப்பவர்.

விடுதலேத் தலேவரான அவர், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் தலேவர். மக்கள் உள்ளத்திலே இடம் பெற்ற ஒரு மாபெரும் தேசியத் தலேவர். தன்னைப் பின்பற்றியவர்கள் அவரை விரும்புவது கூட அவ்வளவு ஆச்சரியம் இல்லே. தென் ஆப்பிரிக்காவில் வாழும் வெள்ளேயர்கள்கூட அவரைப் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதே அனேவரும் ஆச்சரியப்படக்கூடியதொன்றாகும். அந்த அளவிற்கு மாற்றாருடைய உள்ளத்தையும் கவர்ந்த மாபெரும் தலேவர்.

சர்க்கார், அவர்மீது தேசத் துரோகக் குற்றம்சுமத்திச்சிறையில் அடைத்தது. நாடு கடத்தியது. அவசரச் சட்டத்தைப் பயன்படுத்தி, அவர் சிறையிலே அடைக்கப்பட்டார். இறுதியாக, அவரது தலேமையிலே இயங்கிவந்தஆப்பிரிக்கதேசிய காங்கிரஸ் கட்சி, சட்ட விரோதமான கட்சி என்றுகூடச் சர்க்கார் தடை விதித்தது.

அவரது பேச்சுக்களிலிருந்தே இயற்கையான சுபாவத்தை ஒருவர் நன்கு அறிந்துகொள்ளலாம். ஷார்ப்வில்லி என்ற இடத்தில், பல்லாயிரக்

கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்டனர். உயிர் நீத்த அந்த உத்தமர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும், லுத்துலி அநுதாபம் தெரிவிக்கையில்கூட அவர் அமைதி இழக்கவில்லை; ஆத்திரப்படவில்லை.

ஒரு பலாத்கார இயக்கம் எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் வாழ்ந்ததில்லை; வாழவும் முடியாது என்பதை அந்த மாவீரன் நன்ருக உணர்ந்திருக்கிருன். பலாத்காரச் செயல்களைத் தூண்டிவிட்டுப், புரட்சிக்குப் புதியதோர் தத்துவம் கூறுபவர்கள், நாம் 20-ம் நூற்ருண்டில் வாழ்கிரேம் என்பதை மறந்துவிட்டவர்களாகவே கருதவேண்டியிருக்கிறது. திரட்டி வைத்துள்ள மக்கள் சக்தியை, புரட்சி என்ற பெயராலே எளிதிலே திசை திருப்பிவிட முடியும். முடியாத காரியம் என்று எவரும் சொல்லமுடியாது. புரட்சிக்கு வெறியூட்டும் விதத்திலே பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர்களோ, புரட்சி பற்றிய வரலாறுகளோ தெரிந்தவர்கள் இல்லை என்று சொல்லிவிடமுடியாது. ஆனல், புரட்சிக்குப் பின்னர் நாம் எதிர்பார்க்கின்ற பலன் கிடைத்தால்கூடப் பரவாயில்லை. ஆனல், முற்றிலும் மாருக, விபரீதமான விளைவுகள் ஏற்பட்டு, விரும்பத் தகாத தொல்லைகளையே காரணம் இன்றி அனுபவிப்பதென்ருல், எவர்தான் அப்படிப்பட்டபுரட்சியை விரும்புவார்கஸ்? காலம் கனிந்து இருக்கும்போதுதான் புரட்சி வெற்றிபெறும். தொழிலிலே புரட்சியை உண்டுபண்ணிவிடலாம், விஞ்ஞானத்திலே புரட்சியை உண்டுபண்ணிவிடலாம். ஆனல், மக்கள் புரட்சி மட்டும் தானகவே உருவாகக்கூடிய ஒன்ருகும்.

உலக மக்கள், காட்டுமிராண்டிகள் என்று எண்ணிக்கொண்டிருக்கிற ஆப்பிரிக்கர்கள், அதிகம் பேர் கல்வியறிவு பெருத அந்த நாட்டவர்கள், ஜுலு இனத்தின் அந்தத் தலைவன் லுத்துலி, ஷார்ப்வில்லியில் நடைபெற்ற அந்தச் சோகம் நிறைந்த நிகழ்ச்சிக்கு அநுதாபம் தெரிவிக்கையில் கூறியதாவது,

**"ஆப்ரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று அகிம்சை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். வெள்ளையர்கள், கருப்பர்கள் ஆகிய இரு சாராரும் அடங்கியபொதுமக்கள் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் வகையில், எங்களுடைய சக்திக்கு ஏற்றவகையில் பாடுபட்டுவந்திருக்கிரேம்."**

**"இந்த மகத்தான கொள்கைக்கு (அகிம்சை) மதிப்பளிக்கும்படி பொது மக்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்."**

**"அதிகாரத்தில் உள்ளவர்கள், தங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதாகக் கருதிக்கொண்டு, அனுவசியமான விரும்பத்தகாத பலாத்காரச் செயல்களில் ஈடுபடவேண்டாம் என்று அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்."**

"கொள்கைகளைப் பொறுத்தவரையில், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சிக்கும், சர்க்காருக்கும் எவ்வித கருத்து வேறுபாடு இருப்பினும், நம்முடைய தந்தையர் நாட்டில் நிறவெறியையொட்டி அவ்வப்போது ஏற்படும் குழப்பமான நிலைமைகளில்கூடப் பலாத்காரத்தில் ஈடுபடாமல், அமைதிவழியைப் பின்பற்றியிருக்கிரேம். இனியும் தொடர்ந்து அதேவழியைப் பின்பற்றுவோம் என்று உறுதியளிக்கிறேன்."

ஷார்ப்வில்லியில் நடைபெற்ற கோரமான கொலைகளைக் கண்டு மனம் புழுங்கிப்போயிருக்கும்மக்கள் உணர்ச்சிகளை ஆக்கவேலைக்கும், அழிவு வேலைக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். எனினும், அந்த விடுதலைத் தலைவன் லுத்துலி, அத்தகைய தீயதோர் எண்ணத்திற்குப் பலியாகாமல், உயரிய நோக்கத்தோடு சர்க்காருக்கே அறிவுரைகளை வழங்கினன். பண்பின் உறைவிடமாகத் திகழும் அப்படிப்பட்ட மாவீரர்களைக் கோழைகள்என்று கருதுவோரும் உளர்.

லுத்துலி, அறுபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னுப்பிரிக்காவில், ரொடீஷியா என்ற நகரத்தில் பிறந்தவர். அவருடைய தந்தையார் கிருத்துவ மார்க்கத்தைத் தழுவியவர். மாதாகோயிலில் பணியாற்றிய அவர், நேடாலில்இருந்துரொடீஷியாவிற்கு மாற்றப்பட்டார்.

விடுதலைத் தலைவன் லுத்துலி, ஆடம்ஸ் கல்லூரியில் கல்வி பயின்ருர். அமெரிக்க மத நிறுவனங்களில் பணியாற்றினர். தற்போது, ஆப்பிரிக்கர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் பழைய கல்விச் சட்டத்தின் துணைகொண்டு மறுக்கப்பட்டிருக்கிறது.

1936-ம் ஆண்டில்தான் சர்க்கார் அனுமதிபெற்றுஅவரது இனமக்கள் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அந்த இன மக்களின் சம்பிரதாயப்படிப் பார்க்கப்போனல், ஒரு முறை ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், ஆயுட்காலம் வரை அவர்தான் அந்த இன மக்களுக்குத் தலைவராக இருப்பார். இதற்கிடையில் மக்களுடைய நன்மதிப்பைப் பெறவில்லை என்ருல், அவர் தூக்கியெறியப்பட்டு, வேருெருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

1952-ம் ஆண்டு, ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடைபெற்ற ஒத்துழையாமைப் போராட்டத்தில் அவர் பங்குகொண்டதால், தென்னுப்பிரிக்கச் சர்க்கார் அவரைப் பதவியிலிருந்து விலக்கினர். ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையிலேயே தலைநகரான பிரிடோரியா நகரத்திற்கு வரவழைக்கப்பட்ட அவருக்கு, வெள்ளை எசமானர்கள் அறிவுரை புகன்ருர்கள். காங்கிரஸ் கட்சியைவிட்டு விலகிவரும்படி அதிகாரிகள் அவருக்கு இரண்டுவார காலம் தவணை அளித்தார்கள்.

ஒரு ஜுலு தலைவனின் கடமைகளை அவர் எடுத்துக்கூறினர். மக்களுக்குப் பணியாற்றுவதுதான் தனது முதற்கடமை, தலையாய கடமை என்றும், இரண்டாவதாகத் தான் சர்க்கார் பணி என்றும் அவர் கருதினர். எனவே, அவர் சர்க்கார் பணியிலிருந்து உடனடியாக விரட்டப்பட்டார். அதன் காரணமாகவே மக்கள் அவரிடத்தில் அளவிற்கு மீறிய அன்புகாட்டினர். மதிப்பளிக்கவும் செய்தனர். மக்களிடத்திலே அவருக்குள்ள செல்வாக்கு மேலும் வலுப்பெற்றது.

வருவாய் இழந்த அவர், தன்னுடைய வாழ்க்கையை நடத்த, தானே உழுது விவசாயம் செய்து பொருளீட்டும் நிர்ப்பந்தத்துக்கு ஆளானர். தன்னை ஒரு விவசாயி என்றே அவர் அழைத்துக்கொள்கிருர். தன்னுடைய மனைவியைப்பற்றி அவர் பெரிதும் வருந்துகிருர். கட்சிப்பணியும், சிறை வாழ்க்கையும் விவசாயத்தைத் திறமையோடு செய்யவும் அனுமதிக்கவில்லை, அமைதியான குடும்பவாழ்க்கை நடத்தவும் முடியவில்லை.

பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு பேசுவதுகூட மாபெரும் குற்றமாகக் கருதப்பட்டது. எனினும், அவர் தனது பிரச்சாரத்தை மாதாகோயில்களில் நடத்திவந்தார்.

அவர்மீது விதிக்கப்பட்டிருந்த தடைச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர், 1959-ம் ஆண்டில்தான் ஆப்பிரிக்க நாட்டில் உள்ள முக்கிய நகரங்களுக்கெல்லாம் அவர் போய்வர முடிந்தது. அதுபோது பல்வேறு பொதுக்கூட்டங்களிலே கலந்துகொண்டு வீரஉரையாற்றினர். அவருடைய உரை ஆப்பிரிக்க நாட்டில்

உள்ள பல்வேறு இன மக்களையும் வெகுவாகக் கவர்ந்துவிட்டது என்றால் மிகையாகாது. அவர் பேசுகின்ற கூட்டங்களுக்கெல்லாம் ஆப்பிரிக்கர்கள் முன்னதாகவே போட்டியிட்டுக்கொண்டுவந்து இடம் தேடிக்கொண்டு, கட்டிடத்தை நிரப்பிவிடுவார்கள். கலப்பு மக்களிடையே அவர் பெற்றிருந்த செல்வாக்கு, வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளை மிரளச்செய்தது. எனவே, இலிகொண்டசர்க்கார், அவரது கூட்டங்களுக்கும், செயல்முறைகளுக்கும் தடைகள் பல விதித்தது.

1956-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ம் நாள் பலதரப்பட்ட ஆப்பிரிக்கர்கள்மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு பலர் கைதுசெய்யப்பட்டார்கள்.

ஒரு சில நாட்களுக்குள்ளாகவே அதே காரணத்தைக்காட்டி, லூத்துலியும் மற்றும் 156 பேர்களும் சிறையிலே தள்ளப்பட்டார்கள்.

ஓராண்டுக்காலம் அந்த வழக்கு நடைபெற்று, லூத்துலி உட்பட 65 பேர்மீது குற்றம் நிரூபிக்கப்படமுடியாது போகவே, விடுதலை செய்யப்பட்டார்கள். உயரமான உருவமும், பரந்து விரிந்து கிடக்கும் அவரது மார்பும், தினவெடுக்கும் அவரது தோள்களும் பார்ப்பவர்கள் அனைவரையும் மலைக்கச் செய்துவிடும்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அவரிடத்திலே காணப்பட்ட விலைமதிக்க முடியாத ஒரே ஒரு செல்வம், தன்னுடைய வெண்கலக் குரலும், பேச்சுத் திறமையுந்தான்.

நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில், வெளியிலே பல்லாயிரக்கணக்கான, ஏன் இலட்சக்கணக்கான விடுதலை வீரர்கள் தன்னுடைய தலைவர் எப்படியும் விடுதலை செய்யப்பட்டுவிடுவார் என்ற நம்பிக்கையிலே திறந்த மோட்டார்கார் ஒன்றை வைத்துக்கொண்டு, வழிமேல் விழிவைத்துக் காத்துக்கிடந்தனர். விடுதலை செய்யப்பட்டது அறிந்ததும், திறந்த மோட்டாரிலே அந்த மாவீரனை அமர்த்தி விடுதலை முழக்கங்களை முழங்கிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

மீசையும், தலைமயிரும் நரைத்துக் காணப்பட்டாலும், அவர் உறுதி தளராத உள்ளத்தைக் கொண்டவராகவே காணப்பட்டார். சுருக்கமாகச் சொன்னால், எதையும் தாங்கும் இதயம் உள்ளவராகவே தோன்றினர். 61 வயது நிரம்பியவராக இருப்பினும் அவரது முகத்திலே இளமைப் பொலிவு காணப்பட்டது.

ஒரு முறை, அவர் கருப்பு ரிப்பன் ஒன்றை அணிந்துகொண்டிருந்தார். ஷார்ப்வில்லியில் உயிர் நீத்த விடுதலை வீரர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க எண்ணிக்கொண்டிருந்த ஒருவர், அது குறித்து அவரிடத்திலே கேட்டபோது,

''இந்தக் கருப்பு ரிப்பன் துக்கத்தின் அறிகுறி. தென்னாப்பிரிக்க சர்க்காரின் 50-ம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி நான் இந்தக் கருப்பு ரிப்பன் அணிந்திருக்கிறேன். கடந்த 50 ஆண்டுகளாக அடக்குமுறைக்கு ஆளான எங்கள் இதயக் குமுறலை இந்த அடையாளத்தின் மூலமாகத் தெரிவிக்கிறோம்'' என்று கூறினர்.

மேலும் லூத்துலி, அந்த நண்பரிடத்திலே பேசிக்கொண்டிருக்கையில், "வெள்ளையர்கள் ஆப்பிரிக்காவில் குடியேறவில்லை என்றால், பல்வேறு இனத்தைச் சேர்ந்த ஆப்பிரிக்க மக்கள் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டு பிணமாகியிருப்பார்கள் என்று டாக்டர் வேர்வோர்ட் அடிக்கடி சொல்வதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

"எங்கள் நாட்டுச் சரித்திரத்தை அவர் மீண்டும் படிக்கவேண்டும். வரலாறு எழுதியவர்கள் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வரலாறு எழுதியவர்கள் வெள்ளையர்களே. ஆப்பிரிக்க இனமக்கள் ஒருவரை ஒருவர் மோதிக்கொள்ளச் செய்தது வெள்ளையர்களே என்பதை வரலாறு நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது''

என்று அந்த நண்பரிடத்திலே கூறிய லூத்துலி, எனக்காக டாக்டர் வேர்வோர்ட் அவர்களிடத்திலே இதனை எடுத்துச் சொல்லுங்கள், என்று கேட்டுக்கொண்டார்.

ஐம்பதினாயிரம் முதற்கொண்டு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர்களை, ஆப்ரிக்க நாட்டுப் பிரதமர் டாக்டர். வெர்வொர்ட் சந்தித்ததும் இல்லை, சந்திக்க விரும்பியதும் இல்லை. ஆப்ரிக்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதில்லை என்றே தேசிய சர்க்கார் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

"கடந்த ஆண்டு முன்னேற்றக் கட்சி துவக்கப்படுவதற்கு முன்பு, நான் இது வரையில் எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவில்லை'' என்று லூத்துலி அவர்களே கூறுகிறார்கள் என்றால், நிறவெறி பிடித்த ஏகாதிபத்திய வெள்ளை சர்க்கார், இவர்களை எந்த அளவு மதிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

கேப்டவுன் நகரத்திலிருந்து 200 மைல்களுக்கு உள்ளாகவே இருக்கும் புகழ் வாய்ந்த மீன் நதிக்கரையிலே, முதல் கபீர் யுத்தத்திலே போயர்களை எதிர்த்து எங்கள் இனமக்கள் போராடினார்கள். மீண்டும் அந்த ஆணவம் வெடித்துக் கிளம்பியிருக்கிறது என்று லூத்துலி கருத்தறிவித்திருக்கிறார். கபீர் யுத்தம் நடைபெற்ற மீன் நதிக்கரையை எல்லையாக நிர்ணயித்து ஆப்பிரிக்காவைப் பிரித்துக் கொடுத்துவிட்டாலே போதும் என்ற எண்ணத்திலேயே லூத்துலி அவர்கள் இருக்கிறார்கள். ஏன் என்றால், பிரிக்கப்பட இருக்கும் அந்தப் பெரும் பகுதியில் தங்க, வைரச்சுரங்கங்கள் இருக்கின்ற காரணத்தினால், அதுவே போதும் என்று அந்த மாவீரன் கருதுகிறான்.

"ஆப்பிரிக்கர்களாகிய நாங்கள், எப்படி வாழ்கிறோம் என்பதை உண்மையிலேயே வெள்ளையர்கள் அறிய மாட்டார்கள். எசமானன்-அடிமை என்ற உறவைத் தவிர வெள்ளையர்களுக்கும் எங்களுக்கும் வேறு உறவுமுறை கிடையாது. தன்னுடைய வரையறை என்ன என்பதை எசமானரிடத்தில் பேசிக்கொண்டிருக்கும் ஆப்பிரிக்க அடிமை நன்றாக உணர்ந்திருக்கிறான்."

"இதை இன்னமும் நன்றாக விளக்குவதானால், **"உன்னுடைய எசமானரின் ஆலோசனை, சட்டத்தைவிட மிகப் பெரியது''** என்று எங்களிலே ஒரு பழமொழிகூட நீண்ட பல ஆண்டுகளாக வழங்கி வருகிறது.''

அண்மையில் அல்ஜீரியாவுக்குச் சென்று வந்த அவர், அங்கே நடப்பது போன்ற நிகழ்ச்சிகளில் நாங்கள் இதுவரையில் ஈடுபட்டதில்லை என்று அறிவித்தார். ஆப்பிரிக்காவில் குடிமகனாக இருக்கவேண்டும் என்றால், சர்க்கார் அனுமதி பெற்று அனுமதிச் சீட்டு வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இந்த அநீதியை

ஆப்பிரிக்க மக்கள் கண்டிக்கிருர்கள். எதிர்த்துப் போராடுகிருர்கள்.

சில தினங்களுக்கு முன்புதான், லூத்துலி தனது அனுமதிச் சீட்டுக்குப் பகிரங்கமாக நெருப்புவைத்துக் கொளுத்தினுர். அவரது அந்த நடவடிக்கையின் காரணமாக அனுமதிச் சீட்டு முறையை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக போலீஸ் உயர்தர அதிகாரி ஒருவர் உத்தரவு பிறப்பித்துள்ளார். 96 இலட்சம் மக்கள் கொண்ட ஆப்பிரிக்காவிலே ஐந்து இலட்சம் பேர் அனுமதிச் சீட்டுக்களைக் கொளுத்துவார்களேயானுல், அனுமதிச்சீட்டுமுறை ஒழிக்கப்பட்டுவிடும் என்று லூத்துலி கருதுகிருர்.

ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளாவது,

1. ஆப்பிரிக்க மக்களின் நலன்களைக் காப்பாற்றுவது, அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது.
2. பாரபட்சம் காட்டும் சட்டத்தின் பிடியிலிருந்து ஆப்பிரிக்க மக்களை விடுதலையடையச் செய்வது.
3. ஆப்பிரிக்க மக்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவது.
4. ஆப்பிரிக்க மண்ணில் வெள்ளைக்காரர்கள் அனுபவித்துவரும் எல்லாவித உரிமைகளைப் பெறவும், முழுக் குடியுரிமையை உடனடியாகப்பெறுவதற்கும் போராடுவது.

ஆகியவைகள்தான் ஆப்பிரிக்க காங்கிரஸ் கட்சியின் உடனடியான வேலைமுறைகள். 1912-ம் ஆண்டு லூத்துலி இந்தக் கட்சியைத் துவக்கியபோது பல்வேறு இனங்களாகப் பிரிந்துவாழும் ஆப்பிரிக்க மக்களை ஒன்றுபடுத்தும் எண்ணத்திலேயே அவர் இந்தக் கட்சியைத் துவக்கினுர். ஏனென்ருல், சர்க்கார் இந்த இன மக்கள் பிரிந்து தனித்தனியே வாழ்வதையே விரும்புகின்றனர் என்ற உள்நோக்கத்தை லூத்துலி நன்ருகத் தெரிந்துகொண்டிருந்தார்.

சர்க்கார் பேச்சுவார்த்தைகளுக்கு உடன்படுவார்களேயானுல், சொத்துரிமை உள்ள ஆப்பிரிக்கர்களுக்கும், எழுத்தறிவுபெற்ற ஆப்பிரிக்கர்களுக்கும் வாக்குரிமை வழங்குவதாய் இருந்தால் முதல் வெற்றியாக அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிருர். ஆனுல், இதில்பரிதாபத்துக்குறிய விஷயம் என்னவென்ருல், ஆட்சிப்பொறுப்பில் உள்ள ஆணவம் பிடித்தவர்கள், ஆப்பிரிக்கத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இல்லை.

லூத்துலி தலைமையில் இருந்து பிரிந்துபோன எத்தர்கள் சிலர் பான் ஆப்பிரிக்கன்ஸ் என்று தனியமைப்பு ஏற்படுத்திக்கொண்டு அவர்களும் மேற்கண்டகொள்கைகளுக்காகவே பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்கிருர்கள் என்ருலும், மக்கள் அன்பைப் பெற முடியாதவர்களாகவே இருக்கிருர்கள். லூத்துலி தலைமையில் இயங்கும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி வலிமை பொருந்திய, மக்கள் நல்லெண்ணெத்தைப் பெற்ற ஒரு மாபெரும் இயக்கமாகத் திகழ்கிறது. அதனுடைய தலைவர் லூத்துலி, பண்பின் உறைவிடமாக, மக்கள் உள்ளத்திலே எல்லாம் இடம் பெற்ற ஒரு மாபெரும் தேசியச் சின்னமாக விளங்குகிருர்.

**புதிய இயக்கங்கண்டவர்களைக் கண்டு அவர் பொருமைப்படவில்லை; கோபம் அடையவில்லை. ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியிலிருந்து, சிலரை பான் ஆப்பிரிக்க காங்கிரஸ் கட்சியினர் வலை போட்டுப் பிடிக்கின்றனர். என்ருலும், அவர்களது வலையில் யாரும் சிக்குவதாகத் தெரியவில்லை. அவர்களது போக்கும், செயலும் ஆப்பிரிக்க காங்கிரஸ் கட்சிக்குப் புதியதோர் வலிவையே யூட்டி வருகிறது.**

அதற்கு மற்றுமோர் முக்கியமான காரணம் என்னவென்ருல், புதிய கட்சியினர் செயல் முறைகளைக் கண்ணுரக் கண்ட லூத்துலி சிறிது கூட மனம் தளராமல், கோபம் அடையாமல், ஆத்திரப்படாமல், அமைதியிழக்காமல் — பொறுமையின்உறைவிடமாகப்-பண்பின் பிறப்பிடமாக இருந்து, நிறவெறி பிடித்தலையும் வெள்ளையர்களிடத்திலே காட்டிவரும் அநுதாபத்தையே புதிய கட்சி (பான் ஆப்பிரிக்க காங்கிரஸ்) யினரிடத்திலும் காட்டிவரும் அவரது பண்பு, அவரை மேலும் எட்ட முடியாத இடத்திற்கு உயர்த்தியிருக்கிறது.

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யக்கூடியவன்; செய்வான் என்று எண்ணிக்கொண்டுதான் இங்கு வந்துள்ளாரா?' என்று நினைத்தபோதுஎன்நெஞ்சு கொதித்தது. உடல்பதறியது, மூளைக் குழம்பிற்று. சட்டென்று எழுந்து நின்றுகொண்டேன் நான்.

"நீங்கள் சொல்வதுபோல் எழுதித் தருவதுபற்றி இதுவரை நான் நினைத்ததே கிடையாது. இனி நினைக்கப்போவதும் இல்லை'' என்றேன் அழுத்தந்திருத்தமாக.

"நினைக்கவேண்டாம். செய்யுங்கள். செய்யச்சொல்லத்தான் நான் வந்திருக்கிறேன்'' என்ருர் அவர் கேலிச் சிரிப்போடு.

என் ஆத்திரம் மேலும் பெருகிற்று. அந்தப் பெரிய மனிதரிடம் என் ஆத்திரம் செல்லுபடியாகாது என்பதுபற்றியே நான் நினைக்கவில்லை.

"நீங்கள் இதற்கு வேறு ஆள் பார்ப்பதைவிட, இப்படிப்பட்ட கயமையை விட்டுவிடுவதே நல்லது'' என்று முகத்திலடித்தாற்போல் சொல்லிவிட்டு, என் அறையிலிருந்து வெளியேறினேன் நான்.

"எழிலன், எழிலன்'' என்று பின்னுலிருந்து அவர் அழைத்தார். அதை நான் சட்டையே பண்ணவில்லை. சற்று நேரத்திற்குப்பிறகு அவர்களும் வெளியேறிவிட்டார்கள்.

வெகு எளிதில், இரண்டே நிமிடங்களில் அந்தச் செல்வச் சீமான் எனக்குப் பகைவர்,—இல்லை, இல்லை; நான் அவருக்குப் பகைவன் ஆகிவிட்டேன்.

பிறகு நான் விசாரித்ததில் தெரிந்துகொண்டேன் — காலையில் நான் மருத்துவம் புரிந்த ஏழைப் பாட்டாளியரைத் தாக்கியோர், இந்தச் சோலையாண்டிக் கும்பல்தான் என்று. தாக்கியது மட்டும் போதாதா? அவர்கள்மீது வழக்கு வேறு தொடுக்கப் பொய்ச்சான்று தேடுகிருர்கள்! என்ன அநியாயம்! அஞ்சி ஒதுங்கவேண்டிய செய்திக்கு எத்துணை ஆணவத்தோடு, அஞ்சாமைகொண்டு இயங்குகின்ருர்கள் இவர்கள்! துணிதல்வேண்டாத தீய செயலுக்கு, எத்துணைத் துணிச்சல் பெற்று நடக்கின்ருர்கள் இவர்கள்! இவர்கள் கொட்டம் அடங்க, மக்கள் விழிப்புப் பெறுவது எந்நாளோ!

✽

# உயிர்ப் பரிசு

லூர்து. ஜேம்ஸ்

[சங்ககாலம்—தமிழின் — தமிழரின் பெருமையை முரசறைந்து, தரணிக்குத் தெரிவித்துக்கொண்டிருந்த காலம்......கலம்கொண்டு காலம் கண்டு, ஞாசினியைக் கைப்பற்றித் தமிழ்த்தாய் கொலுவீற்றிருந்த சமயம்! நெல்லைக் கவர நினைக்கும் கோழியைக் காதிலணியும் குழை கொண்டு விரட்டிய குங்குமநிறத்தழகிகள் பலரை நம் இன்பத் தமிழகம் பெற்றிருந்த நேரம்! அன்பிலே — ஆண்மையிலே — அறம் குன்றுத மறத்திலே — விருந்தோம்பும் பண்பிலே—திரைகடலோடியும் திரவியம் தேடுவதிலே — தேடிவந்த பொருளை 'இல்லை' என்பவருக்கு ஈந்தளிப்பதிலே — எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய தமிழகம், ஒரேயொரு குறையைப் பெற்றிருந்தது. ஆம்! பொருமைப் படுகுழியில் விழாமலிருக்கத் தவறிவிட்டது. அப்படித் தவறிய காரணத்தால், சில இரத்தக் கறை பதியப்பெற்ற சம்பவங்கள் காலாகாலத்திற்கும் வரலாற்றில் இடம்பெற்றுவிட்டன. அந்த அழிவு வரலாற்றின் சிதைந்த ஏடொன்று சித்தரிக்கும் சம்பவம்தான் இந்தச் சோகநாடகம்......]

## காட்சி 1

*[பாண்டியநாட்டுக் கோநகரான மதுரையில் ஒரு இல். புலவர் இருவர் பேசிக்கொள்கின்றனர். நகர் சோதனைக்கு அவண் வரும் பாண்டிய மன்னனும், மந்திரியும் அவர்கள் பேச்சை ஒற்றுக்கேட்கின்றனர்.]*

**புலவர்:-** [ஏட்டில் எழுதிக்கொண்டே பாடுகிருர்......]

"......சுருப்புண
நறுவீ யுரைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்கு பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் ரரி......"

**புலவர்...2 :-** (வந்தபடியே) ஐயா! என்ன பாரி பல்லவி? பாடல் எதற்கு? பரிசில் பெறவா?

**புலவர்...1 :-** பின் எதற்கு? ஏட்டில் தீட்டித் தீட்டி, வீட்டை நிறைக்கவா? புலவரே! உமக்குப் பாரியைப்பற்றித் தெரியாது என்று எண்ணுகிறேன். பாரி கொடையில் மாரி ஐயா, மாரி! கொழுகொம்பின்றித் தவித்த காட்டு முல்லைக் கொடிக்குத் தன் ★ பொற்றேரையே கொழுகொம்பாக்கியிருக்கிருன். அவன் கொடை வன்மையைப்பற்றி நாடே நாவார, மனமாரப் புகழ்கின்றது.

**புலவர்...2 :-** மன்னன் என்ருல் இப்படியன்ருே இருக்கவேண்டும்? நம் மன்னருந்தான் இருக்கிருர். பயன் உண்டா? புகழ் இருக்கின்றதா?

*[மறைவிலிருந்த மன்னரின் முகம் விகாரமடைகிறது]*

**புலபர்...1 :-** புலவரே! நாளை நாம் பறம்பு செல்வோமா? இதில் உமக்கேதும் தடை?

**புலவர் 2 :-** தடையா? இரவலர் புரவலர்களைக் காண்பதைத் தவிர, வேறு வேலை? நாளை நிச்சயம் பறம்பு செல்வோம்?

*[விடைபெற்றுச்செல்கிருர்]*

## காட்சி 2

*[அரண்மனையில் தனியிடம் சிந்தனைக் குளத்தில் குளித்தபடி, அங்கு மிங்கும் நடைப்பயில்கின்ருர் பாண்டியமன்னர். மந்திரி மௌனமாக நிற்கிருர்]*

**மன்னர்:-** (தனக்குள்) "மன்னன் என்ருல் இப்படியன்ருே இருக்க வேண்டும்? நம் மன்னனுந்தான் இருக்கிருர்! பயன் உண்டா? புகழிருக்கின்றதா?" என்ன இழிவு! நமக்குத் திறைகட்டி இறைஞ்சி வாழும் குறுநில மன்னன் பாரி! கேவலம், முந்நூறு ஊர்களுக்கு மட்டுமே சொந்தக்காரன். இந்தத் தென்பாண்டி மண்டலத்திற்குத் தலைமை தாங்குகிறேன் நான்! பயன்? புகழெல்லாம் அந்தச் சிற்றெறும்பிற்கு அல்லவா செல்கின்றது? என்ன மந்திரியாரே!

**மந்திரி:-** (மிகவும் அச்சமாக) பள்ளத்தை நோக்கி வெள்ளம் ஓடுவது உலகறிந்த உண்மையாயிற்றே, மன்னவா!

**மன்னர்:-** (ஏளனமாக நகைத்து) உலகறிந்த உண்மை! அமைச்சரே! அந்த உலகறிந்த உண்மையை உலகறியச் செய்பவனுக்குக் கிடைக்கும் பரிசு என்ன என்பதை, உலகறியச் செய்கிறேன். சேரநாட்டிற்கும், சோழநாட்டிற்கும் நம் ஒற்றர்களை அனுப்பி இச்சூழ்நிலை அங்கும் நிலவுகின்றதா என்பதை அறிந்து வரச்செய்யுங்கள். ஒற்றர்கள் நம் எல்லையைவிட்டுப் புறப்படட்டும், இன்றே! இப்பொழுதே!!!

*[அமைச்சர் வணங்கிச் செல்கிருர்]*

## காட்சி 3

*[பாரியின் அரண்மனை. கபிலரின் வருகையை எதிர்நோக்கியிருக்கிருன் பாரி. கபிலர் வருகிருர்]*

**கபிலர்:-** (வந்தபடியே) வணக்கம், மலைநாட்டு மன்னவா!

**பாரி:-** வருக, என் இனிய நண்பரே! இன்று வருவதற்கு ஏன் இத்தனை தாமதம்?

**கபிலர்:-** வழியில் ஒரு காட்சி கண்டேன், களிப்படைந்தேன். என்ருலும், கண்கள் நீர்வீழ்ச்சியென நீரைச் சொரியவும் தவறவில்லை.

**பாரி:-** உள்ளமுருக்கும் அத்தகைய காட்சி, என்ன கபிலரே?

**கபிலர்:-** அறுத்து முடிந்த தினைப் புனம் ஒன்றில், உதிர்ந்து கிடந்த தினைக்கதிர்களைக் குருவிகள் பொறுக்கித் தின்றுகொண்டிருந்தன. கானமயிலொன்று, அப்பொழுது தன் தோகையை அசையவிட்டு நடந்து வந்தது. குருவிகள் கான மஞ்ஞைக்குப் பயந்து மேலே உயர்ந்தும், கீழே தாழ்ந்தும் உட்கார்ந்தன. உயரப் பறக்கும் உயர்ந்தோர்கள், தாழ நடக்கும் கீழோர்க்கும் பயப்பட வேண்டியிருக்கின்றது! என்ன உலகம்! உலக அமைப்பு விசித்திரமாகத் தோன்றவில்லை?

**பாரி:-** உண்மை, கபிலரே! இயற்கை உணர்வுகளுக்குப் புறவுருவம் கொடுக்கும் காவியச் சிற்பி நீங்கள்! நீங்கள் நமக்குத்தமிழாசான்,

புலவர் மட்டுமல்ல; மதிமந்திரி, உற்றுழி உதவும் உண்மை நண்பர், தங்களை அடையப் பெற்ற என் பாக்கியமே பாக்கியம்.

[கபிலரைத் தழுவிக்கொள்கிறுன் பாரி.]

## காட்சி 4

[பாரியினுல் மகட்கொடை மறுக்கப்பட்ட சோழனுக்கும், சேரனுக்கும் ஓலை போக்குகிறுன் பாண்டியன். அதன்படி மதுரையில் கூடுகிருர்கள் அவர்கள்.]

பாண்:- வருக! வருக!! சோழ, சேர மன்னர்களே! தங்களைக் காணப்பெற்ற என் பாக்கியமே பாக்கியம்.

சோழர்:- தங்கள் ஓலை கண்டு ஓடோடி வந்தோம், அம்முடங்கலின் பொருள்?

பாண்:- (ஆத்திரமாக) பொருள்! பொருளாக மதிக்கப்படத்தகாத ஒரு அற்பப் புழு, நம்மையெல்லாம் அவமதித்துக்கொண்டிருக்கிறது. 'மூவேந்தர்களுக்கும் பெண் கிடையாது! இரு மகளிரையும் மூவர்க்குக் கூறுபோட்டுக் கொடுப்பதா?' என்று கொக்கரித்துத் திரியும் குள்ளநரியைக் கொன்று, குழி தோண்டிப் புதைக்கவேண்டும்.

சேரன்:- தாங்கள் யாரைக் குறிப்பிடுகின்றீர்கள்?

பாண்:- வேறு யார்? பறம்பை யாளும் பாரியைத்தான் குறிக்கிறேன்.

சேரன்:- அவசியம் நாம் மேற்கொள்ளவேண்டிய திருப்பணி, பாண்டிய மன்னரே!

பாண்:- (சோழனைப் பார்த்து) உங்கள் முடிவு?

சோழன்:- (கோரமாகச் சிரித்து!) முடிவு! போர்! போர்!! போர்!!! சாம்ராஜ்யங்களையே சாய்த்துச் சாம்பலாக்கியிருக்கின்ரேும், வெறும் சம்பங்கி மலர் பாரி! அவன் எம்மாத்திரம்?

பாண்:- நன்று நண்பர்களே! பறம்புப் போர்க் களத்தில் மீண்டும் சந்திப்போம், படையுடன்!

சேர, சோழர்:- அப்படியே!

[பிரிகிருர்கள்]

## காட்சி 5

[பறம்பு முற்றுகைக்குப்பின் பல திங்கள் ஓடி ஒளிந்து விட்டன. பாரியை வெற்றிகொள்ள முடியாத மூவேந்தர்கள், சோர்ந்து தங்கள் பாடிமனையில் அமர்ந்திருக்கின்றனர். பறம்பு (மலை) மேலிருந்து பறந்துவந்த அம்பொன்று, அவர்களுக்கு எதிராகத் தரையில் குத்திட்டு நிற்கிறது. சேவகன் ஒருவன் அதைப் பாண்டிய மன்னரிடம் எடுத்துக் கொடுக்கிறுன். அத்துடன் ஓலையொன்று இணைக்கப்பட்டிருக்கிறது]

பாண்டியன்:- (ஓலையைப் பிரித்து) கபிலர் கவிபுனைந்து அனுப்பியிருக்கிருர். கேளுங்கள்:

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீது அழிந்து
திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே
வான்கண் அற்று அவன் மலையே வானத்து
மீன்கண் அற்று அதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளில் கொள்ளலிர் வாளில் தாரலன்
யான்அறி குவன் அது கொள்ளுமாறே
சுசிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல் நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்குஈ யும்மே."

சேரன்:- (பாண்டியன் படித்து முடிப்பதற்குள்) பாரியை வெல்வது முடியாது என்று அல்லவா முரசு கொட்டுகிருர், கபிலர்?

பாண்:- ஆம்! முற்றுகையினுல் பாரியை வெல்வது கடினந்தான்.

சோழன்:- பின் வேறு வழி?

பாண்:- இருக்கிறது. கபிலரே அந்த வழியை நமக்குக் காட்டியிருக்கிருர்.

[சோழனிடமும் சேரனிடமும் தனித்து ஏதோ கூறுகிருன். அதைக் கேட்ட அவர்கள் வதனங்களில் புன்னகை மலர்கிறது.]

## காட்சி 6

[பரிசிலர்போல மாறுவேடம் பூண்டு, மூவேந்தர்கள் பட்டி மன்றத்தில் காத்திருக்கின்றனர். அவர்களைச் சந்திக்க வருகின்ருன் பாரி....]

பாரி:- பரிசிலர்களே, வருக! வருக!! என்னைத் தனிமையில் நாடிய காரணம்...?

பாண்:- உண்டு, மன்னு! தங்களை வெற்றிகொள்ளவே தனிமையை நாடினேம்.

பாரி:- ஒன்றும் புரியவில்லையே!

பாண்:- தாங்கள் எங்களை வணங்க வேண்டும்.

பாரி:- இவ்வளவுதானே?

[வணங்குகிருன். வஞ்சகம் வேலை செய்கிறது; பாரியின் முதுகில் கட்டாரியைப் பாய்ச்சுகிருன் பாண்டியன். இரத்தம் பெருக்கெடுத்தோட, 'ஐயோ' என்ற அவலக் குரல் பாரியிடமிருந்து கிளம்புகிறது.]

பாண்:- ஒழிந்தான் பாரி!

சேரன்:- வீழ்ந்தது பறம்பு!!

சோழன்:- வாழ்க கபிலர்!!!

[மூவரும் ஓடிவிடுகிருர்கள்.]

பாரி:- ஐயோ! வஞ்சகமாக என்னை வீழ்த்திவிட்டார்களே வீணர்கள்! பண்புகெட்ட பாதகர்கள்! இமயத்தின் எல்லை கண்ட என் தமிழகமே! நீயே உன் புதல்வனைக் கொன்றுவிட்டாயே!

[பாரி குத்தப்பட்ட செய்தியறிந்து அங்கவை, சங்கவை, கபிலர், மற்ற ஏனையோரும் ஓடிவருகின்றனர்.]

அங்கவை:- சங்கவை:- } ஐயோ! அப்பா எங்களை அனுதையாக விட்டுச் செல்கிறீர்களே!

கபிலர்:- பாரி மன்னு! உங்கள் உயிர்த் துறவுக்கு நானே மறைமுக காரணனுகிவிட்டேனே! ஐயோ! உங்கள் பெருமையைப் பறைசாற்றும் என்று எண்ணி,

நான் புனைந்த கவிதையே உங்கள் உயிரைக் குடிக்கும் சிறுமைக்கு வழிகோலிவிட்டதே!

பாரி:- பாதகமில்லை, கபிலரே! நான் சாகப்போகிறேன்; பழிச்சொல் ஏந்தியல்ல — பாராட்டுதல்களைச் சுமந்துகொண்டு! உயிரையும் பரி சாகக் கொடுத்து இறந்தான் பாரி என்ற ஒரு சொல் போதும் எனக்கு! நண்பரே! என் இரு கண்மணிகளையும் தவிக்கவிட்டுச் செல்கிறேன். அவர்கள் வாழ்வு வளம் பெறச் செய்வது உங்கள் பொறுப்பு. அங்க ... வை! சங்...க...வை!! கபி......

[புகழுடம்பு எய்துகிருன் பாரி.]

[முல்லைக்கொடி ஒன்று, தான் படர்வதற்கு ஆதாரம் ஏது மின்றி இருந்ததைக்கண்ட பாரி, முல்லையின் பால் இரக்கங் கொண்டு, அது, தாவிப்படர் வதற்குத் தனது தேர்தான் உகந்ததென்றெண்ணி, அதனை, அது படர்வதற்குத் துணையாக இருக்கவிட்டுச் சென்றதாகக் கூறப்படும் நிகழ்ச்சி அத்துணைப் பொருத்த மாகத் தெரியவில்லை. முல்லை படர்வதற்குத் தேர்தானு துணை புரிதல்வேண்டும்? முல்லைக் கொடியின் பக்கத்திலே ஒரு கொம்பை நட்டுவிட்டிருக் கலாம், அல்லது ஒரு வேலி யையே அமைத்து, அது, நீண்டுபடர ஏற்பாடு செய்திருக் கலாம். பாரி, ஏனோ, பகைமுகம் சென்று வெற்றிகாண உதவும் தேரை, வீணே ஒரு கொடிக்குள் புதைந்து மறைந்து கிடக்கும் படி செய்தார்?

இச்செயல், சாதாரண மனித அறி வைக்கூடத் தொடமுடியாது போலல்லவா அமைந்துவிட் டது. பாரியின் கொடைத்திற னைக் காட்டவந்த கபிலர், பாரிக்கு உயர்வும், புகழும் இத ஞல் உண்டாகும் என்று கருதி அவ்விதம் ஒரு கவிதையைப் புனைந்துவிட்டார் என்றே கருது கிறோம். ஒருவேளை, அச்செயல், அக்காலத்துக்குப் பொருந்துவ தாக இருக்கலாமோ, என் னவோ!

குளிரால் வாடிய மயிலுக்குப் பட் டாடை அளிப்பதும், படர முடி யாத முல்லைக்குத் தேர் தரு வதும், அவ்வளவு தேவையும், அவசியமும், பயனுமுள்ள செயல்களாகத் தெரியவில்லை.]

# "படிப்பை நிறுத்திவிடு!"

—[செல்வம்]—

அன்று தேதி பத்து. நல்லசிவத் திற்குச் சம்பள நாள். சுவ ரில் மாட்டியிருந்த, அந்தப் பழைய கடிகாரத்தைப் பத்தாவது தடவை யாக நிமிர்ந்து நோக்கினர் நல்ல சிவம். "ஆயிற்று, இன்னும் கால் மணி நேரத்திற்குள் எப்படியும் பணம் வந்துவிடும். இரண்டு இரவு களாகத் தூக்கமின்றிச் சிந்தித்துத் தயாரித்த அந்த மாத, வரவு செலவுத் திட்டத்தைச் சிறிது நேரத்திற்குள் நிறைவேற்றிவிடலாம்''–இப்படியாக அவருடைய மனம் வரப்போகும் பணத்தையும், தயாரித்துள்ள திட் டத்தையும் எடைபோட்டுக்கொண் டிருந்தது, பாவம்! அவர்தான் என்ன செய்வார்? அரசியல் வல்லுநர் களும், பொருளாதார நிபுணர்களும் கூடிப்பேசி,விவாதித்துத் தயாரிக்கும் வரவு, செலவுத் திட்டங்களிலேயே குறைபாடுகளும், பற்ருக் குறையும் ஏற்படும்போது, சாதாரண கிராமக் கர்ணீகர் நல்லசிவத்தின் வரவு-செல வுத் திட்டத்தில் பற்ருக் குறைக்கா பஞ்சம்!

அந்தக் கிராமத்தில், வருவாய்த் துறையின் அடிப்படை இயந்திர மாக—அதாவது கிராமக் கர்ணீக ராக நல்லசிவம் ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குமேல் பணி புரிந்து வருகிருர். அந்தக் காலத்தில், அவர் வேலைக்கு வரும்போது மாத ஊதி யம் ஏழு ரூபாய்தான். ஏழு ரூபாய் சம்பளம் கொடுத்த வெள்ளைக்காரன் காலத்தில், அவர் என்னவோ வள மாகத்தான் வாழ்ந்து வந்தார். காலம் செல்லச் செல்ல, விலைவாசி கள் ஏற ஏற, அவருடைய வாழ்க் கையில் படிந்திருந்த பசுமை, கொஞ் சம் கொஞ்சமாகப் பட்டுப்போய்விட் டது. ஏழு ரூபாயிலிருந்து முப்பது ரூபாய் வரை சம்பளம் வளர்ந்தும், வறுமை என்னவோ தீர்ந்தபாடில்லை! ஊதியம் ஓரளவிற்கு உயர்த்தப்பட் டாலும், வாழ்க்கையின் அடிப் படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அந்த ஊதிய உயர்வு போதவில்லை! எப்படியோ, ஆசைக்கும், அச்சத்திற்குமிடையே ஊசலாடிக்கொண்டு வாழ்க்கை வண்டியைத் தள்ளிக்கொண்டிருந் தார்.

தன்னுடைய குழந்தைகளை எப் படியாவது படிக்க வைத்துவிட வேண்டும் என்ற ஆர்வத் துடிப்பு அவருக்கு நிறைய உண்டு. அவ ருடைய மூத்த மகன் மாணிக்கம், நான்காம் படிவத்தில் படித்துக் கொண்டிருந்தான். அடுத்தவன் முத்து, ஏழாம் படிவத்திலும், சிறிய குழந்தைகள் இரண்டு பேர் ஆரம்பப் பள்ளியிலும் படித்துக்கொண்டிருந் தனர். குடும்ப நிலையை உணர்ந்து தான் குழந்தைகள் திறமையாகப் படித்தனர். பண நாயகியின் அருள் இல்லாதபோது, எந்தத் திறமை இருந்துதான் என்ன பயன்? பெரிய பையன் மாணிக்கத்திற்குச் சம்பளம் கட்டவில்லை என்று பள்ளிக்கூடத் தில் பெயர் அடித்துவிட்டார்கள். முதல் தேதியிலிருந்து அவன் பள் ளிக்குப் போகவில்லை. அபராதத் தோடு, புதிதாகப் பணம் கட்டினுல் தான் பள்ளிக்கூடத்தில் மீண்டும் சேர்ப்பார்கள். இந்தச் சமதர்ம அரசாங்கத்தில் என்னதான் ஒரு வன் ஏழையாக இருந்தாலும், அவன் உயர் சாதிக்காரனுக இருந்து விட்டால் பள்ளிக்கூடத்தில் முழுச் சம்பளம் கட்டிப் படிக்கவேண்டும். உயர்ந்த சாதியில் தோன்றிவிட்ட ஒரே குற்றத்திற்காக, ஒருவன் ஏழை யானுலும், பணம் கட்டித்தான் படிக்கவேண்டும் என்பது என்ன சோசியலிசமோ? இந்தப் பிரச்சினை யினுல் மாணிக்கம் ஒரு மாதம்கூட ஒழுங்காகப் பள்ளிக்குச் சம்பளம் செலுத்தியது இல்லை. பரமனுக்குப் பால் முழுக்கும், பண ஆராதனையும் செலுத்துவதற்கு அந்த ஊரில் பணம் படைத்தோர் இருந்தனரே தவிர, ஏழைச் சிறுவன் ஒருவனின் நல்வாழ்விற்கு வழிகாட்ட எவரும் இருக்கவில்லை. இந்த நிலையிலும், மாணிக்கம் எப்படியோ படித்துக் கொண்டுதானிருந்தான்.

தெருக்கோடியில், பட்டாமணியத் தின் ஏவலாள் வந்துகொண்டிருந் தான். பரபரத்துக்கொண்டிருந்த மனதை அடக்கிக்கொண்டு அவ

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

னையே பார்த்துக்கொண்டிருந்தார். கையில் துணிப் பையுடன் வாசல் படி ஏறி உள்ளே நுழைந்தான் பட்டாமணியத்தின் ஏவலாள் வேலன். "என்னப்பா, பணம் கொண்டு வந்திருக்கிறாயா?'' நல்லசிவத்தின் குரலில் சற்றுப் பெருமை பிடிபட்டது. ஏவலாள் மிகுந்த பணிவோடு, "ஆமாம் சாமி, இந்தாங்க சம்பளப் பட்டி, கையெழுத்துப் போடுங்க'' என்று கூறிக்கொண்டே சம்பளப் பட்டியை எடுத்து அவர் கையில் கொடுத்துவிட்டுப், கைப் பையினின்றும் பணத்தை எடுத்து எண்ணிக் கீழே வைத்தான். கையெழுத்துப் போட்டுப் பட்டியை நகர்த்திவிட்டு ஆவலோடு பணத்தை எடுத்து எண்ணினார். அவ்வளவும் புத்தம் புதிய ஒரு ரூபாய் நோட்டுகள். எண்ணிப் பார்த்தார், சரியாக இருபது ரூபாய் இருந்தது! மீண்டும் ஒரு முறை எண்ணினார், இருபது ஒரு ரூபாய் நோட்டுகள்தாம் இருந்தன! அவருக்கு உலகமே சுழல்வதுபோல் தோன்றியது. "என்னப்பா வேலா, இருபது ரூபாய்தானே இருக்கிறது'' என்றார் திகைப்புடன்!

"ஆமாங்க, பத்துரூபாய்க்கு இரண்டு 'ஐந்துரூபாய்' பரிசுப் பத்திரங்கள் உங்கபேரில் வாங்கியாச் சுங்களாம்—ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஐயா அப்புறமா பத்திரம் கொண்டுவந்து கொடுப்பாங்களாம், எனக்குக்கூட ஐந்து ரூபா பிடிச்சிட்டாங்க—இருபது ரூபா சம்பளத்தில் இப்படி ஒரு ஐந்து ரூபாய் போய்விட்டால், நான் என்னஙக செய்வது? இந்த மாசம் என்குடும்பம் சோறு தின்ன முடியாதுங்க, மண்ணைத்தான் கொட்டிக்கணும்! நான் வர்ரேனுங்க'' என்று அவனுடைய உள்ளக் கொதிப்பை வார்த்தைகளாக உதிர்த்துவிட்டு நகர்ந்தான்.

ஒருவாரத்திற்கு முன் நடைபெற்ற கிராம அதிகாரிகள் கூட்டத்தில், ஒவ்வொரு கிராம அதிகாரியும், பத்து ரூபாய்க்குப் பத்திரம் வாங்கவேண்டும் என்று அதிகாரிகள் கூறியது அப்போதுதான் நினைவிற்கு வந்தது. பணத்தைக் கையில் வைத்துக்கொண்டு சிந்தனையில் மூழ்கிவிட்டார். இந்த இருபது ரூபாயைக் கொண்டு எப்படி இந்த மாதத்தை ஓட்டுவது, சாப்பாட்டிற்கு நெல் வாங்குவதா? கடைச்சாமான்கள் வாங்குவதா? பையனுக்குச் சம்பளம் கட்டுவதா? ஒரு புடவையையே துவைத்துக் கட்டிக்கொண்டிருக்கும் அவருடைய மனைவிக்குப் புடவை வாங்கிக் கொடுப்பதா? கடந்த ஒருமாத காலமாக நோயினால் அவதிப்படும் பெண் குழந்தைக்கு மருந்துச் செலவுபார்ப்பதா? இவற்றில் எதைச் செய்வது? எதை விடுவது! ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவர்போல், "மாணிக்கம், மாணிக்கம்'' என்று தன்னுடைய முதல் மகனை அழைத்தார்.

"என்னப்பா, கூப்பிட்டீர்களா'' என்று கேட்டுக்கொண்டே மாணிக்கம் வந்தான். அவனை ஒருதரம் உற்று நோக்கினார். "சரி, உனக்கு எவ்வளவு சம்பளம் கட்ட வேண்டும்?''.

"இரண்டுமாதச் சம்பளமும், அபராதமும் சேர்த்துப் பன்னிரண்டரை ரூபா கட்டவேண்டும்''

"மாணிக்கம்! நான் சொல்லுவதைக் கவனமாகக்கேள். இன்று நம்முடைய குடும்பம் இருக்கும் சூழ்நிலையில், உன்னைப் படிக்கவைப்பதென்பது மிகவும் துன்பமாக இருக்கிறது. நான் என்னுடைய நிலையை அறிந்துகொள்ளாமல், அதிகமாக ஆசைப்பட்டு உன்னைப் பள்ளியில் சேர்த்துவிட்டேன்—கிராமக் கர்ணீகராகிய என்னுடைய மகன் குறைந்தது ஒரு தாலுக்கா குமாஸ்தாவாக வாவது வரவேண்டும் என்று விரும்பினேன். ஆனால், அந்த எண்ணம் நிறைவேறாமலேயே போய்விட்டது. உனக்குச் சம்பளம் கட்டக்கூட என்னால் முடியவில்லை — இதுவரை உன்னுடைய சம்பளப் பாக்கிக்காக நான் எழுபத்தைந்து ரூபாய்வரை மேலத்தெரு பண்ணையாருக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இனிமேல் எவரிடமும் கடன்கேட்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. தம்பி! இந்த மாதம் எப்படியாவது இரண்டுமாதச் சம்பளத்தையும் கட்டிவிடலாம் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன். அதற்குப் பரிசுப்பத்திரம் என்ற பெயரில் பத்து ரூபாயை வற்புறுத்தி எடுத்துக் கொண்டார்கள். நான் எப்படியப்பா உனக்குப் பணம் கட்டுவது? இதையெல்லாம் சித்தித்து ஒரு முடிவிற்கு வந்தபிறகுதான், உன்னிடம் கூறுகிறேன், நீ படிப்பை நிறுத்திவிடு என்று. நீயும் ஏதாவது ஒரு கடையில் வேலைசெய்து மாதம் பத்தோ, பதினைந்தோ கொண்டுவந்தால்தான் குடும்பம் நடக்கும்போல் தோன்றுகிறது—எனவே, நீ, இன்றோடு பள்ளிக்கூடம் போவதை நிறுத்திவிடு. முடிந்தால், பிற்காலத்தில் வசதி ஏற்பட்டால், தம்பியைப் படிக்க வைப்போம். இல்லையேல் நடப்பது நடக்கட்டும்'' என்று தழதழத்த குரலில் கூறிவிட்டுக் கண்களைத் துடைத்தவாறு வெளியில் கிளம்பினார்.

மாணிக்கம் திகைத்து நின்றான். படித்துப் பட்டம்பெற்று, நல்லதொரு வாழ்க்கையினை அமைத்துக் கொள்ளலாம், என்று நம்பியிருந்த அந்த இளம் உள்ளத்தின் மன எழுச்சிகள் அனைத்தும் "பரிசுப் பத்திரம்'' என்ற பெயரால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டன. எப்படியோ, அந்த இளைஞனின் எதிர்காலத்தில் இருள் சூழ்ந்துவிட்டது! இந்த நாட்டின் ஆளவந்தார்கள், மக்களுடைய ஊதியத்தையும் உயர்த்தாமல், விலைவாசியையும் கட்டுப்படுத்தாமல், இதுபோன்ற பரிசுப் பத்திரங்களையும் அமுல்செய்து கொண்டுள்ள ஆட்சி முறையின் போக்கைப் புரிந்துகொள்ள முடியவில்லையே, என்ற ஏக்கம் மாணிக்கத்தை மேலும் அதிர்சிக்குள்ளாக்கியது.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.